வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : news@eelanadu.lk | மலர் : 04 | 07.07.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 210 | பக்கங்கள் : 16

# முல்லைத்தீவு மனித புதைகுழி அகழ்வுப் பணி இடைநிறுத்தம்

- 13 மனித எச்சங்கள் மீட்கப்பட்டன
- அகழ்வு குறித்து அடுத்த வாரமே முடிவு

முல்லைத்தீவு, ஜூலை 07

முல்லைத்தீவு மனிதப் புதைகுழியில் 13 மனித உடல் எச்சங்கள் மீட்கப்பட்டன. இன்னமும் மனித உடல் எச்சங்கள் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இந்த நிலையில், அகழ்வு பணிகள் நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டன. அகழ்வைத் தொடர்வது குறித்து அடுத்த வியாழக்கிழமை தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

15



## மனித புதைகுழி அகழ்வு பணி எதேச்சதிகாரமாக நடக்கிறது

### சுமந்திரன் எம். பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூலை 07

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் எதேச்சதிகாரமாக நடைபெறுகின்றன. இந்தப் பணிகள் சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் நடைபெற வேண்டும் என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வை நேற்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்ட

15

## நீதிமன்றத்தின் உத்தரவால் 4 இலட்சம் மாணவர்க்கு அநீதி!

### மாணவர் திறனும் பாதிப்பு என்கிறார் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, ஜூலை 07

நீதிமன்ற உத்தரவின் பேரில் ஆசிரியர், அதிபர் நியமன பரீட்சைகள் பிற்போடப்பட்டதால் சுமார் 4 இலட்சம் பாடசாலை மாணவர்கள் கடும் அநீதிக்கு ஆளாகியுள்ளனர். தரமான எதிர்கால சந்ததியை உருவாக்கும் வகையில் ஆசிரியர் பரீட்சையை விரைவில் நடத்த அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

யுனிசெவ் நடத்திய ஆய்வின் முடிவுகளின்படி மூன்றாம் வகுப்பு மாணவர்களின் வாசிக்கும் மற்றும்

15

## கட்டணமானி பொருத்தப்படாத ஓட்டோக்கள் மீது நடவடிக்கை!

### 20ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 07

யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டண மானி பொருத்தப்பட்டு ஸ்ரிக்கர் ஒட்டப்படுதல் வேண்டும். இது எதிர்வரும் 20ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது. இதை மீறுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் யருஷ் தெரிவித்துள்ளார்.

15

## புலிகளின் பணம், தங்கத்துக்கு என்ன நடந்ததென விசாரியுங்கள்

### சிறீதரன் எம். பி. வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 07

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் சொத்துகளுக்கு என்ன நடந்தது? தமிழீழ வைப்பகத்தின் சொத்துகளுக்கு என்ன நடந்தது? நீங்கள் கோடி கோடியாக கொள்ளையடித்த புலிகளின் சொத்துகளுக்கு என்ன நடந்தது? குமரன் பத்மநாதனை கைது செய்து அவரிடமிருந்து பறித்த பணத்துக்கு என்ன நடந்தது? இதை விசாரியுங்கள் - இதை விசாரித்தால் இந்த நாட்டின் ஊழல் இல்லாமல் போகும் - என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.

நேற்று அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தனது உரையில்,

15

## உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்!

கொழும்பு, ஜூலை 07

உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டமூலம் தொடர்பான திருத்தங்கள் எதிர்வரும் 19ஆம் திகதி பாராளுமன்ற அமர்வில் குழுநிலை வேளையின்போது மேற்கொள்ளப்படும் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான விவாதத்தின் இறுதியில் உரையாற்றிய போதே இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

15

## 45 நிமிடங்களுக்கு ஒருவர் விபத்தால் உயிரிழக்கிறார்

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, ஜூலை 07

நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் வீதி விபத்துகளால் சுமார் 12 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். அதாவது, ஒவ்வொரு 45 நிமிடங்களுக்கு ஓர் உயிரிழப்பு விபத்தால் ஏற்படுகிறது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டில் 15 முதல் 44 வயதிற்குட்பட்டோரின் உயிரிழப்பு காரணங்களில் வீதி விபத்துக்களே பெரும்பான்மையாக உள்ளது. 45 நிமிடங்களுக்கு ஒருவர் வீதி விபத்தில் உயிரிழக்கிறார் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 13ஐ நடைமுறைப்படுத்துமாறு

# சர்வதேச சமூகம் ஒரேகுரலில் அரசை வலியுறுத்த வேண்டும்

### மனோ, செல்வம், சித்தார்த்தன் எம். பிக்கள் கனடா இராஜதந்திரியிடம் எடுத்துரைப்பு

கொழும்பு, ஜூலை 07

அரசமைப்பில் உள்ளவாறு 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி தனது நேர்மையை பறைசாற்றும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கனடா, அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, ஜப்பான் உள்ளடங்கிய சர்வதேச சமூகம் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும். இதற்கு கனடா முன்முயற்சி எடுக்க வேண்டும்.

- இவ்வாறு கனடிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகார

15



## சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கடிதம்!

கொழும்பு, ஜூலை 07

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவின் செயல்பாடுகள் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சியின் 34 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகரின்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் எமது ஆலோசனையை கவனம் கொள்க!

## ரிஷாத் பதியுதீன் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 07

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பில், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பூரண பங்களிப்புடனும் ஆலோசனையுடனும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அடங்கிய ஆவணத்தை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் ரிஷாத் பதியுதீன் எம்.பி. வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை அவர் ஆற்றிய உரையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்தார். மேலும்,

"சுதந்திரத்துக்குப் பின்னர் இந்த நாடு நாசமடைவதற்கு அரசியல்வாதிகளும் குறிப்பாக, ஆட்சிக் கதிரையில் அமர்வதற்காக மக்களை தமது தேவைக்கேற்ப உசுப்பேத்தி, இனவாதத்தையும் மதவாதத்தையும் அவர்களுக்கு ஊட்டி, அதன்மூலம் நாட்டைக் குட்டிச்சுவராக்கியவர்களுமே காரணமாகும். இதனால் இந்த நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டு, மிகவும் துன்பகரமான ஒரு காலகட்டத்தில் நாம் இருந்துகொண்டிருக்கின்றோம்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் இன்று (நேற்று) பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையானது, காலத்தின் தேவையாகவும் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாக இருப்பதையிட்டு எனது நன்றியை தெரிவிக்கின்றேன். தேவையான நேரத்தில் - தேவையான ஒன்றை - கொண்டுவந்திருந்தாலும் அதனை பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்துவதன் மூலமே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைபயக்கும்.

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பில் ஆராய்வதற்கு முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரியால் அமைக்கப்பட்ட குழுவினரின் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கையொன்று, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டு, பின்னர் அதன் பிரதிகள் முஸ்லிம் பாராளுமன்ற உருப்பினர்களான எமக்கும் நீதி அமைச்சரால் வழங்கப்பட்டிருந்தது. குறித்த ஆலோசனைகளில் அடங்கிய பல விடயங்களுடன் எம்மால் உடன்பட முடியாதிருக்கின்றது.

உதரணமாக 'Muslim' என்ற சொல் நீக்கப்பட்டு 'persons professing Islam' என்ற சொற்பிரயோகம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதேபோன்று, 'Nikah ceremony' என்ற சொல் நீக்கப்பட்டு 'Solemnization' என்ற சொற்பிரயோகமானது குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இதுவரை காலமும் இருந்த 'வலி' (தந்தை, தந்தை சார்ந்த சகோதரன் அல்லது தாயுடைய சகோதரன்) நீக்கப்பட்டு, பெண் விரும்புகின்ற ஒருவர் வலியாக இருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பல விடயங்களில் நாங்கள் உன்பாடு இல்லாதது குறித்து நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டினோம். இதனை செவிமடுத்த அவர், நீங்கள் அனைவரும் ஒன்றுகூடி, உங்களது பொதுவான திருத்தங்களையும் ஆலோசனைகளையும் முன்வையுங்கள் என்று பெருந்தன்மையுடன் கூறினார். எனினும், தொடர்ந்தும் இதனை காலம் தாழ்த்த முடியாதெனவும் கூறினார்.

அதனடிப்படையில், முன்னாள் அமைச்சர் பௌசி தலைமையில், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவையும் அழைத்து, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கலந்துரையாடலில் ஈடுபாட்டோம். இந்த விடயங்களை இஸ்லாமிய ஷரீஆவை அடிப்படையாக வைத்து ஆலோசித்தோம். ஏனெனில், இஸ்லாம் இறுதியாக நபி (ஸல்) அவர்களின் மூலம் பூரணப்படுத்தப்பட்ட ஒரு மார்க்கம். இதில் நெளிவுசுழிவுகள் கிடையாது. ஒரு சிலர் வேறு நாடுகளை சுட்டிக்காட்டி சிலவற்றை கூறுகின்றார்கள். அவ்வாறு, இஸ்லாத்தில் செய்ய முடியாது.

நமது நாட்டில் சுமார் 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட உலமாக்களைக் கொண்ட அனைத்து முஸ்லிம்களாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மார்க்க அமைப்பே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா. பல்வேறு கொள்கைகளைச் சார்ந்தவர்கள் இந்த அமைப்பில் இருந்தாலும் 'சூரா' அடிப்படையில் மேற்கொள்ளும் ஏகோபித்த தீர்மானத்தை அனைத்து முஸ்லிம்களும் அங்கீகரிக்கின்றனர்.

அந்தவகையில், ஜம்இய்யத்துல் உலமாவுடன் இணைந்து மேற்கொண்ட திருத்தங்கள் அடங்கிய ஆலோசனைகளை, பாராளுமன்ற உறுப்பினர் பௌசி தலைமையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் கையொப்பமிட்டு, முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பான திருத்தம் ஒன்றை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் இன்று (நேற்று) கையளித்தோம். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 20 முஸ்லிம் எம்.பிக்களில் 18 பேர் இதில் கையொப்பமிட்டுள்ளனர்.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நீங்கள், முஸ்லிம்கள் உட்பட அனைத்து இன மக்களின் வாக்குகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அந்தவகையில், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளையும் அவர்கள் ஜம்இய்யத்துல் உலமாவின் அனுசரணையுடன் தங்களிடம் கையளித்த திருத்தத்தையும் கருத்தில் எடுத்து, நியாயமாக செயல்படுங்கள் என இந்த சபையில் வேண்டிக் கொள்கின்றேன் - என்றார். (ஐ)



நல்லூர் கிழக்கு அருள்மிகு ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நேற்று வியாழக்கிழமை காலை பக்திபூர்வமாக நடை பெற்றது. (படம் : ஐ.சிவசாந்தன்)

# சமகால அரசியல் கலந்துரையாடல்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 07

சமகால அரசியல் சூழ்நிலைகள் தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி இரு கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2. 00 மணி வரையிலும், கிழக்கு மாகாண நிகழ்வு மட்டக்களப்பில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 முதல் மாலை 5.00 மணி வரையிலும் இந்தக் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

மக்கள் சிந்தனை மையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த கலந்துரையாடலில்,

ஆயர் நோயல் இம்மானுவேல் (திருகோணமலை மறை மாவட்டம்) , தவத்திரு. அகத்தியர் அடிகளார் (தென்கயிலை ஆதினம்) தவத்திரு வேலன் சுவாமிகள் (சிவகுரு ஆதீனத்தின் முதல்வர்) , பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம் (யாழ். பல்கலைக்கழக அரசியல் துறை தலைவர்) , பேராசிரியர். குணபாலன் (துறைத்தலைவர் பட்டப் பின் படிப்புக்கள், தென் கிழக்கு பல்கலைக்கழகம்) , கலாநிதி வ.குணபாலசிங்கம் (கிழக்கு பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி) , கலாநிதி. புஸ்பராசா (அரசியல் துறை விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக் கழகம்) , திருமதி. புளோரிடா சிமியோன் (அரசியல்துறை விரிவுரையாளர், கிழக்கு பல் கலைக்கழகம்) ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (ஐ)

# லாப்ஸ் எரிவாயுவின் விலையும் குறைந்தது

கொழும்பு, ஜூலை 07

லாப்ஸ் எரிவாயு நிறுவனமும் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை குறைத்துள்ளது.

நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதன்படி, 12.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 300 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி புதிய விலை 3,690 ரூபாயாகும்.

5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 120 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 1,476 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொருளாதார வீழ்ச்சிக்கு தனியோர் அரசாங்கத்தை குறை கூறக்கூடாது

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, ஜூலை 07

நீண்ட காலமாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய 225 பேரும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பங்களிப்பு செய்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் ஒரேயோர் அரசாங்கத்தை மட்டும் குறை கூறுவதில் அர்த்தமில்லை என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், இந்த நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கும் போது உதவுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தோம். ஆனால், சில சமயங்களில் எதிர்க்கட்சிகள் தங்கள் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துகின்றன. வரியைக் குறைக்கும் போதும் ஏசுகிறார்கள் - அதிகரித்தாலும் ஏசுகிறார்கள்.

அந்த நபர்களுக்கு எந்த நோக்கமும் இல்லை. ஒரு அரசாங்கம் மட்டுமல்ல, கடந்த காலங்களில் இருந்த நாட்டின் 225 பிரதிநிதிகளும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பங்களித்துள்ளனர். எனவே, திருடனின் தாயிடம் கேட்டும் பயனில்லை - என்றும் கூறினார். (ஐ)

# வட்டி வீதங்களை குறைப்பதால் வணிக முயற்சியாளருக்கு நன்மை

## நிதி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஜூலை 07

வட்டி வீதங்களை குறைப்பதற்கு மத்திய வங்கி மேற்கொண்டுள்ள தீர்மானம் வணிகங்களின் நம்பிக்கையை விரிவுபடுத்தும் எனவும் வணிக முயற்சியாளர்களுக்கு பெரிதும் நன்மையளிக்கும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மைய காலங்களில் பணவீக்கத்தில் மிகத்துரிதமான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதன் விளைவாக துணைநில் வைப்பு வசதிவீதம், துணைநில் கடன் வசதிவீதம் ஆகியவற்றை மேலும் 200 அடிப்படை புள்ளிகளால் முறையே 11 சதவீதம் மற்றும் 12 சதவீதமாகக் குறைப்பதாக இலங்கை மத்திய வங்கி நேற்று வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் இவ்வறிவிப்பு தொடர்பில் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவொன்றை செய்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, மத்திய வங்கியின் இத்தீர்மானம் வணிகங்களின் நம்பிக்கையை மேலும் விரிவுபடுத்துமெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இவ்வட்டிவீதக் குறைப்பு நிதியீட்டலுக்கான வாய்ப்பை இலகுபடுத்தியிருப்பதன் விளைவாக இதன்மூலம் வணிக முயற்சியாளர்களும், சிறிய மற்றும் நடுத்தரளவிலான முயற்சியாண்மைகளும் நன்மையடையுமென நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், இந்தத் தீர்மானமானது ஒட்டுமொத்த பொருளாதார செயற்பாடுகளையும் வலுப்படுத்தும் எனவும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை, விரைவான மீட்சிக்கு உதவும் எனவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதை அனுபவிப்பது மிகவும் சிறப்பானதாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ள அவர், இருப்பினும் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
07.07.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்த சிக்கல் தேவையானதா?

வவுனியாவில் அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் சீனித் தொழிற்சாலையானது தற்போது ஒரு விவாதப் பொருளாக மாறியிருகின்றது. ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான கட்சிகளில் ஒன்றான ரெலோவே இந்தத் திட்டத்தை கொண்டுவர முயற்சிக்கின்றது. ஆனால், அந்த கூட்டணியில் உள்ள ஏனைய கட்சிகள் இதனை ஆதரிக்கவில்லை. இந்த நிலையில், பொதுவெளிகளில் ஏனைய கட்சிகளை சேர்ந்தவர்கள் இந்தத் திட்டத்துக்கு எதிரான கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். முதலில், கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ஜனநாயக போராளிகள் கட்சி இந்தத் திட்டத்துக்கு பின்னால் சீனா இருப்பதான சந்தேகத்தை வெளிப்படுத்தித் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டது.

தற்போது, பிறிதொரு பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் வடக்கு மாகாண சபையின் முன்னைநாள் விவசாய அமைச்சருமான சிவநேசன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் வன்னி பாலைவனம் ஆகுமென்று தெரிவித்திருக்கின்றார். அதேவேளை, வடக்கு மாகாண சபையின் முன்னைநாள் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனும் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டிருக்கின்றார்.

தமிழ் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இருக்கின்றபோது இவ்வாறானதொரு சர்ச்சை தேவையானதா? தமிழர் பகுதிகளை நோக்கி முதலீடுகளை கொண்டுவர வேண்டும் - அதில் முரண்பட ஒன்றுமில்லை. ஆனால், தமிழர் பகுதிகளில் திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானிக்கின்றபோது, அதில் தமிழ் கட்சிகளால் எந்தளவு தலையீடு செய்ய முடியும் என்னும் தூரநோக்கும் அவசியம். மத்திய அரசின் பரிந்துரையின் மூலம் மட்டும் முன்னெடுக்கப்படும் திட்டங்களால் தமிழ் மக்கள் பெரியளவில் நன்மையடைய முடியாது. வேண்டுமானால் சில நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கலாம்.

குறிப்பாக, ரெலோ இவ்வாறானதொரு திட்டத்துக்கு ஆதரவு வழங்கும்போது கூட்டுப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டியது கட்டாயமானது - ஏனெனில், ரெலோ - ஒரு தனியான கட்சியாக இருக்கின்ற போதும் ஐந்து கட்சிகளை உள்ளடக்கியிருக்கும் கூட்டணி ஒன்றின் அங்கத்துவ கட்சியாகவும் இருக்கின்றது. எனவே, இவ்வாறான மிகப்பெரிய முதலீட்டுத் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குகின்ற போது, கூட்டமைப்புக்குள் வெளிப்படையான கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருக்க வேண்டும். இவ்வாறானதொரு திட்டத்தின் சாதக, பாதகங்களை ஆராய்ந்து, அதனை முன்னெடுப்பதா - அல்லது இல்லையா - என்னும் அடிப்படையில் கூட்டுத் தீர்மானத்தை மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஏனெனில், இவ்வாறான திட்டங்களை வெறுமனே முதலீடு என்னும் அடிப்படையில் மட்டும் நோக்க முடியாது. தமிழர்களிடம் காணியை தீர்மானிக்கும் அதிகாரங்கள் இல்லாத நிலையில் - மாகாண சபை நிர்வாகமும் இல்லாத நிலையில், தமிழ் கட்சி ஒன்றின் ஆதரவின் பெயரில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான திட்டங்கள் குடியேற்ற நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படமாட்டாது - என்பதற்கு உத்தரவாதங்கள் இல்லை. எனவே, இந்த நிலையில், எதிர்காலத்தில் சிக்கலான நிலைமைகள் ஏற்படுமாக இருந்தால் அதற்கான கூட்டுப் பொறுப்பை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளுமே பொறுப்பேற்க நேரிடும். இதனை கருத்தில் கொண்டே ரெலோ விடயங்களை தீர்மானித்திருக்க வேண்டும். முடிவை எடுத்த பின்னர், அதற்காக விளக்கமளிப்பதிலும் - அதனை நியாயப்படுத்துவதிலும் பயனில்லை. முன்னர் சம்பந்தன் தன்னிச்சையாக செயல்படுகின்றார் - என்னும் குற்றச்சாட்டையே ஏனைய கட்சிகள் முன்வைத்தன.

முன்கூட்டியே கலந்துரையாடி, கூட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் இவ்வாறான விடயங்களை முன்னெடுத்திருந்தால் இவ்வாறு ஒவ்வொரு கட்சியும் மாறுபாடான அறிக்கைகளை வெளியிடுவதாகவும் - பின்னர் அதற்கு ரெலோ மறுப்பும் தெரிவிப்பதாகவும் - இந்த நிலைமை நீண்டு செல்ல வேண்டியேற்பட்டிருக்காது. இப்போது, தேவையற்ற சர்ச்சைக்குள் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சிக்குண்டிருக்கின்றது. இது அதன் தேர்தல் எதிர்காலத்திலும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

# பிரசங்க மரபை சைவ ஆலயங்கள் தொடர்ச்சியாக பின்பற்ற வேண்டும்

## ஆறு. திருமுருகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 07

சகல சைவ ஆலயங்களிலும் சமய பிரசங்க மரபு தொடரவேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் இந்து மாமன்றம் சார்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில், சகல சைவ ஆலயங்களிலும் திருவிழா காலங்களிலும் வெள்ளிக்கிழமைகளிலும் சமய பிரசங்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேண வேண்டும். எமது இளம் சிறார்களின் நன்மை கருதியும் ஆலயம் வரும் அடியவர்களை அறவழிப்படுத்துவதற்கும் மிக அத்தியாவசியமானது சமய நற்சிந்தனை மற்றும் சைவப் பிரசங்கங்கள். தற்போது ஆலயங்களில் கூட்டு பிரார்த்தனை சமயப் பிரசங்க மரபு அருகி வருவதைக் காணலாம்.

இந்த நிலையை மாற்றுவதற்கு ஆலய கடமைகளில் ஈடுபடும் சிவாச்சாரியார்கள், ஆலயங்களை நிர்வகிக்கும் அறங்காவலர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். நல்லை நகர் நாவலர் பெருமான் காலம் தொடக்கம் சைவ ஆலயங்களில் பேணப்பட்டு வந்த பிரசங்க மரபு தற்போது ஒரு சில ஆலயங்களில் மட்டும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஏனைய ஆலயங்களில் இந்த மரபு கைவிடப்பட்டுள்ளது. ஆலயங்களில் நடைபெற்ற புராண இதிகாச சொற்பொழிவுகளும் சமய விளக்கங்களும் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியது ஆலய நிர்வாகிகளின் தலையாய கடமையாகும்.

வெறும் கட்டடங்களாலும் கிரியைகளோடு கூடிய விழாக்களால் மட்டும் மக்களிடம் சமய சிந்தனைகளை பரப்ப முடியாது. எனவே இவ்விடயம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இன்றைய சூழலில் எமது எமது இளம் சமூகம் சமய விடயங்களை நன்முறையில் அறியாத நிலை தொடர்கிறது. கடவுள் நம்பிக்கை அற்ற ஒரு சமூகம் உருவாகி வருகிறது. அதனால் கொலை, களவு, போதை, தற்கொலை என அவலம் தொடர்கிறது. சமூகத்தை ஆற்றுப்படுத்த வேண்டிய பிரதான கடமை ஆலயங்களுக்கு உண்டு. ஆலயங்கள் சமூகம் சார்ந்த பணிகளை தம்மால் இயன்றவரை செய்ய முன்வரவேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# 'புஷ்பக 27' முழுநீளத் திரைப்படத்தின் குறுந்திரை முன்னோட்டம் வெளியீடு



யாழ்ப்பாணம், ஜூலை 07

ஈழத்தில் முதல்முறையாக விண்வெளி கதையை மையமாகக் கொண்டு உயர் தொழில் நுட்பத்தில் தயாரான புஷ்பக 27 முழு நீளத் திரைப்படத்தின் குறுந்திரை முன்னோட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள நித்திலம் கலையகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், மருத்துவர் சிவன்சுதன், ஈழத்தின் மூத்த திரைப்பட நடிகர் இராஜமகேந்திரசிங்கம், மூத்த ஊடகவியலாளர் இரா. பாரதி, லண்டன் கருவி நிறுவனத் தலைவர் சிவா ஜி.சேகரம், மூத்த ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா, திரைப்பட ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் புஷ்பக27 திரைப்பட கலைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

புஷ்பக27 திரைப்படத்தின் குறுந்திரை முன்னோட்டத்தை பேராசிரியர் ரகுராம், மருத்துவர் சிவன்சுதன், திரைப்பட நடிகர் இராஜமகேந்திரசிங்கம் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர்.

தொடர்ந்து பேராசிரியர் ரகுராம், மருத்துவர் சிவன்சுதன், ஊடகவியலாளர் இரா. பாரதி ஆகியோர் சிறு கருத்துரைகளை வழங்கினர்.

நிகழ்வின் இறுதியில், புஷ்பக27 திரைப்பட இயக்குநர் காரை. சிவநேசன் தனது கருத்துக்களை தெரிவித்தது டன் எதிர்வரும் செப்ரெம்பர் வாரத்தில் இந்தத் திரைப்படம் திரைக்கு வரும் எனவும் யாழ்ப்பாணத்தில் மூன்று காட்சிகளை காட்சிப்படுத்த ஏற்பாடுகளை முன் னெடுத்து உள்ளதாகவும் தெரிவித்தார். இந்தத் திரைப்படத்துக்கான திரைக்கதையை சத்திய மெண்டிஸ் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

**ஜூலை - 07 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆனி 22**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.30 - 10.00 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | பஞ்சமி |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் உடனே முடியும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். சக ஊழியர்களிடம் கவனமுடன் பழகுங்கள். இடம், பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
கடினமான காரியத்தையும் எளிதாக முடிப்பீர்கள். வேலையாட்கள் உங்களுக்கு அமைவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். வெற்றி பெரும் நாள்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். புதிய முயற்சி அதிகாரிகள் பாராட்டுவார். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். சக ஊழியர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மனக்குழப்பம் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். ஊழியர்களால் ஆதாயம் உண்டு. மாற்றம் ஏற்படும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. சிறுசிறு அவமானங்கள் வந்து நீங்கும். தர்மசங்கடமான சூழ்நிலையை சமாளிக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களால் பிரச்னைகள் வரக் கூடும். அதிக கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெறுவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

முருகனை விடுதலை செய்ய கோரிய வழக்கு

# மத்திய, தமிழ்நாடு அரசுகள் பதில் அளிக்க நீதிமன்று உத்தரவு

சென்னை, ஜூலை 07

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட முருகனை அகதிகள் முகாமில் இருந்து விடுவிக்கக் கோரிய வழக்கில் மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் இருந்த நளினி, முருகன் உள்ளிட்டோரை விடுதலை செய்து உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தீர்ப்பளித்தது. இதில் இலங்கையைச் சேர்ந்த முருகன் திருச்சியில் உள்ள அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டுள்ளார். இதையடுத்து, தனது கணவரை அகதிகள் முகாமில் இருந்து விடுவித்து தன்னுடன் சேர்ந்து வாழ அனுமதிக்க கோரி நளினி மத்திய அரசுக்கு மனு அனுப்பியிருந்தார்.

இந்நிலையில், தனது மனுவின் மீது முடிவெடுக்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிடக் கோரி, நளினி தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அந்த மனுவில், “லண்டனில் வசிக்கும் மகளுடன் சேர்ந்து வாழ கணவர் முருகன் விரும்புகிறார். கடவுச்சீட்டு பெறுவது தொடர்பாக அவர் இலங்கை தூதரகத்தை தொடர்புகொள்ள வேண்டியுள்ளது. ஆனால், தற்போது அடைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாமில் உள்ள அவரால் அங்கிருந்து வெளிவர முடியவில்லை. எனவே, திருவான்மியூரில் வசிக்கும் தன்னுடன் சேர்ந்து வாழ வகை செய்யும் வகையில் முருகனை அகதிகள் முகாமில் இருந்து விடுவிக்க வேண்டும். வழக்குகளில் சிறைவாசம் அனுபவித்த பல வெளிநாட்டவர்களை சில நிபந்தனைகளின் அடிப்படையில் உறவினர்களுடன் தங்க அரசு அனுமதித்துள்ளது. சிலர் வெளிநாடுகளில் தஞ்சம் புகவும் அரசு அனுமதித்துள்ளது” என மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி என். சேஷசாயி முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, இந்த மனுவுக்கு மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஒத்திவைத்தார். (ஐ)

# அ. தி. மு. க. எம். பியின் வெற்றி செல்லாது என நீதிமன்று அறிவிப்பு

சென்னை, ஜூலை 07

கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தேனி மக்களவைத் தொகுதியில் அ. தி. மு. க. சார்பில் போட்டியிட்டு எம். பி. ரவீந்திரநாத் வெற்றி பெற்றது செல்லாது என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தேனி தொகுதி வாக்காளர் மிலானி தொடர்ந்த தேர்தல் வழக்கில் உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

2019ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் தேனி தொகுதியில் அ. தி. மு. க. சார்பில் போட்டியிட்ட ஓ. பி. ரவீந்திரநாத் வெற்றி பெற்றார். அவரின் வேட்புமனுவில், சொத்து விவரங்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை மறைத்துள்ளார். எனவே, தேனி தொகுதியில் அவர் வெற்றி பெற்றதை செல்லாது என அறிவிக்க வேண்டும் எனக் கோரி தேனி தொகுதி வாக்காளரான மிலானி என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், “தனக்கு வாக்களிக்க, வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து ரவீந்திரநாத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். பணம் வழங்கியது நிரூபணமாகியும் தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லை” என்று கூறியிருந்தார். ஆனால், இந்தத் தேர்தல் வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல. எனவே வழக்கை விசாரணைக்கு ஏற்கக்கூடாது என ரவீந்திரநாத் நிராகரிப்பு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அவரின் கோரிக்கையை ஏற்க மறுத்த உயர் நீதிமன்றம், ரவீந்திரநாத்தின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருந்தது.

நேற்று நடந்த வழக்கின் தீர்ப்பில், 2019ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில், தேனி பாராளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஓ. பி. ரவீந்திரநாத்தின் வெற்றி செல்லாது” என்று தீர்ப்பளித்தார். (ஐ)

# வட இந்தியர்களுக்கு வாக்குரிமை; தமிழர்கள் அதிகாரத்தை இழப்பர்

## நாம் தமிழர் சீமான்

சென்னை, ஜூலை 07

ஒன்றரை கோடி வட இந்தியர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். அவர்களுக்கு வாக்குரிமை அளித்தால் அரசியலையும் அதிகாரத்தையும் தீர்மானிப்பார்கள். தமிழர்கள் அரசியலும் அதிகாரமும் அற்றவர்களாக இருப்போம் என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், முல்லைப் பெரியாறு அணையை பென்னிக் குவிக் என்ற பெருந்தகை கட்டினார். அதற்காக அவரின் மனைவி தனது 300 சவரன் நகையை கொடுத்தார். நமது வறட்சியை போக்க நம்மை வளமாக்க அவர்கள் அணையை கட்டினார்கள். அணையை கட்டியது நமது முன்னோர்கள். அந்த அணை வெறும் சுண்ணாம்பும் மண்ணும் அல்ல. அவர்களின் உழைப்பில் வியர்வையும் இரத்தமும் சதையுமாக இருக்கிறது.

நாம் கட்டிய அணை நமக்கு பயன்படவில்லை. இடுக்கி மாவட்டம் கேரளாவுக்கு சென்றதால் நாம் தண்ணீருக்கு அலைகிறோம். நமது இடத்தை இழந்ததால் நமது பலத்தை இழந்தோம்.

அதேபோல காவிரி உற்பத்தியாகும் குடகு பகுதியில் 90 விழுக்காடு தமிழர்கள்

வாழ்ந்தார்கள். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு அவர்கள் தமிழ்நாட்டோடு இணையுங்கள் என்று போராடினார்கள். ஆனால் , கர்நாடகா மாநிலத்தோடு இணைக்கப்பட்டார்கள். இது வரலாற்றில் மிகப்பெரிய பிழை. காவிரி உற்பத்தியாகும் குடகும் முல்லைப்பெரியாறு



உற்பத்தியாகும் இடுக்கியும் இருந்திருந்தால் தமிழ்நாடு உலகிலேயே செல்வம் கொழிக்கும் நாடாக இருந்திருக்கும்.

ஒன்றரை கோடி வட இந்தியர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். அவர்களுக்கு வாக்குரிமை அளித்தால் அரசியலையும் அதிகாரத்தையும் தீர்மானிப்பார்கள். தமிழர்கள் அரசியலும் அதிகாரமும் அற்றவர்களாக இருப்போம் - என்றார். (ஐ)

# 37 பில்லியன் டொலர் கடன்கள் நிலுவையில்

## அமைச்சர் பந்துல தகவல்



**கொழும்பு, ஜூலை 07**

**சர்வதேச கடன்களை மீளச் செலுத்தும் வேலைத்திட்டத்துக்கமைய 2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் அரசாங்கம் செலுத்தியிருக்கவேண்டிய மொத்த கடன் தொகை 37 பில்லியன் அமெரிக்க டொலராகும். அதனடிப்படையில், 37 சதவீதத்தை எதிர்வரும் ஐந்து வருடங்களில் மீளச் செலுத்தவேண்டியது அவசியமாகும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாராவது ஆட்சிப் பொறுப்பேற்று அறியாமையினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் திரிபுபட்டு இணக்கப்பாடுகள் சிக்கலுக்குள்ளானால் 30 நாட்களுக்கு மேல் அந்த அரசாங்கத்தை யாராலும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. அடுத்த தேர்தலில் முன்னிலையாகும் அரசியல் கட்சி அல்லது குழு சார்பானவர்கள் கட்டாயம் அவர்களின் தேர்தல் கொள்கைத் திட்டத்தில் கடன் மீள்செலுத்துகை தொடர்பில் முறையான திட்டங்களை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டிலிருந்த ஒவ்வொரு அரசாங்கமும் தேசிய மற்றும் சர்வதேச கடன்களைப் பெற்றே நாட்டிலுள்ள அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பெற்ற கடன்களை மீளச் செலுத்தி வந்தாலும் செலுத்த முடியாதளவுக்கு கடன் பெறப்பட்டது. நாளாந்த செயற்பாடுகளுக்குத் தேவையான வருமானம் எம்மிடம் இல்லாததால் அதற்காக எந்த அரசாங்கமாக இருந்தாலும் கடன்பெற்றே ஆகவேண்டும்.

பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்த முடியாத சந்தர்ப்பங்களில் அதற்கான சர்வதேசத்தில் அதிக வட்டியில் மீண்டும் கடனை பெற்றுக் கொண்டோம்.

அதற்கமைய, 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி 1250 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டிருக்கவேண்டும் என்பதுடன் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி 1000 மில்லியன் டொலரும் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி 500 மில்லியன் டொலரும் மீளச் செலுத்த வேண்டியுள்ளது.

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 03ஆம் திகதி 650 மில்லியன் டொலர் கடன் தொகையை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03ஆம் திகதி 1500 மில்லியன் டொலர் கடன் தொகையை மீளச் செலுத்தவேண்டியுள்ளது. 2026 ஆம் ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி 1000 மில்லியன் டொலரும் 2027ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி 1500 மில்லியன் டொலரும் 2028 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி 1250 மில்லியன் டொலரும் 2029 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் திகதி 1400 மில்லியன் டொலரும் 2030 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி 1500 மில்லியன் அமெரிக்க டொலரும் செலுத்த வேண்டியுள்ளது.

ஆகவே, 2025ஆம் ஆண்டு வரை நாட்டை யார் ஆட்சி செய்தாலும் இந்த கடன்களை மீளச்செலுத்துவதற்கு அவர்கள் சட்ட ரீதியாக கடமைப்பட்டுள்ளார்கள். இதிலுள்ள பாரதூர தன்மையை நாடென்ற அடிப்படையில் நாம் சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் மீள்செலுத்தவேண்டிய 37 பில்லியன் அமெரிக்க டொலர் நிலுவையில் இருக்கிறது. இந்த 37 பில்லியன் டொலரில் நூற்றுக்கு 37 சதவீதத்தை எதிர்வரும் ஐந்து வருடங்களில் மீளச் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

மீதம் 51 சதவீதத்தை எதிர்வரும் ஆறு முதல் 20 வருடங்களில் செலுத்த வேண்டும். 12 வீதத்தை 20 வருடங்களின் பின்னர் செலுத்த வேண்டும். அவ்வாறாயின் 2044 ஆம் ஆண்டு வரை இந்த கடன்களை மீளச் செலுத்த வேண்டியுள்ளது.

எனவே, போலியான தகவல்களினூடாக மக்கள் ஏமாறுவதை தவிர்ப்பதற்காக, எதிர்காலத்தில் க அரசாங்கத்தைப் பொறுப்பேற்பதற்கு முன்வரும் அரசியல் கட்சி அல்லது குழுவின் சார்பில் பிரசன்னமாகும் நபர் இந்த கடன் தொகையை எவ்வாறு முறையாக செலுத்துவது என்பது தொடர்பில் அவர்களின் தேர்தல் பிரசாரங்களில் உள்ளடக்கி அதனை செலுத்தும் முறையையும் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் நாடென்ற வகையில் சர்வதேச மட்டத்தில் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களையும் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படும்.

2044 ஆம் ஆண்டு வரையில் செலுத்த வேண்டியுள்ள கடன்களை மீளச் செலுத்துவதற்கு சரியான திட்டங்கள் இல்லையென்றால் கறுப்புப் பட்டியலில் உள்ளிடப்படுவோம். விரும்பியோ விரும்பாமலோ எமக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்படும்-என்றார்.

(அ)

# நெடுங்கேணி கோட்ட பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் திறந்து வைப்பு

வவுனியா, ஜூலை 07

வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள நெடுங்கேணி கோட்ட பாடசாலைகள் நான்கில் கடந்த ஜூன் 28 ஆம் திகதி திறன் பலகைகள் பொருத்தப்பட்ட திறன் வகுப்பறைகள் திறந்து வைக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

தற்போது தொழில்நுட்ப இலத்திரனியல் சாதனங்களின் பாவனை தம் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தி வருவது குறித்து மாணவர்கள் ஆர்வம் கொண்டிருப்பதும் அதனை உணர்ந்து ஆசிரியர்கள் திறன் பலகையினூடு கற்பிக்க விளைவதும் அனுசரணையாளர்களை ஊக்குவித்து வருகின்றது.




இவ்வகையில் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள புளியங்குளம் ஆரம்ப பாடசாலை, மதியாமடு விவேகானந்த வித்தியாலயம், சின்னபூவரசன்குளம் விக்கினேஸ்வரா ம.வி. மற்றும் பன்றிக்கெய்தகுளம் வித்தியாலயத்தைச் சேர்ந்த 588 மாணவர்கள் பயன் பெறவுள்ளார்கள்.

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மற்றும் இரட்ணம் பவுண்டேசன் என்பவற்றால் அமுல்படுத்தப்படும் இச்செயற்பாட்டில் நல்லையா பவுண்டேசன்( வன்னி ஹோப்), தமிழர் வட்டம் போன்ற அமைப்புக்களும் பாலசிங்கம் குகதீபன், மயில்வாகனம் சிறீதரன் ஆகியோரும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப விழாவில் வவுனியா வடக்கு வலயக்கல்வி பணிப்பாளர் மட்டுமன்றி உத்தியோகத்தர்கள், அனுசரணையாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் இணைந்து கொண்டனர்.

(அ)

# மத்திய வங்கியின் வட்டி வீதம் குறைப்பு

கொழும்பு, ஜூலை 07

மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் ஆகியவற்றை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதங்களை 200 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 11 சதவீதம் மற்றும் 12 சதவீதமாக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டரீதியான கையிருப்பு வீதத்தை நிலவும் 4.00 வீதம் அளவிலேயே பேணுவதற்கு நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

இதேவேளை, கடந்த மே மாதம் 31 ஆம் திகதி, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தனது கொள்கை வட்டி வீதங்களை பாரியளவில் குறைக்க தீர்மானித்திருந்தது.

அதன்படி, இலங்கை மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் முறையே 250 அடிப்படைப் புள்ளிகளால் 13.00 சதவீதம் மற்றும் 14.00 சதவீதம் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கிளிநொச்சியில் விடுதியுடன்கூடிய மதுபான சாலை அமைக்கத் தடை

கிளிநொச்சி, ஜூலை 07

கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் உள்ள விடுதியுடன் கூடிய மதுபானச்சாலைக்கு 14 நாட்கள் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட முழங்காவில் பிரதேசத்தில் முழங்காவில் விநாயகர் ஆலயம், பாடசாலை, ஆசிரியர் விடுதி, பொது விளையாட்டு மைதானம் ஆகியவற்றின் மையப் பகுதியில் மதுபானச்சாலை அமைப்பதற்கு பிரதேச பொது அமைப்புக்கள் மற்றும் கிராம மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொதுத் தொல்லை ஏற்படுத்துவதாக தெரிவித்து பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனை அடுத்து நேற்று குறித்த வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது அமைப்புகள் மற்றும் முறைப்பாட்டாளர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி எஸ்.விஜயராணி உள்ளிட்டோர் முன்னிலையாகினர்.

இந்நிலையில் குறித்த மதுபானச்சாலைக்கு 14 நாட்கள் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

(அ)

# ஜனாதிபதி ரணிலை சந்தித்த புதிய விமானப்படைத் தளபதி

கொழும்பு, ஜூலை 07



புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

இலங்கையின் 19 ஆவது விமானப்படைத் தளபதியாக எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அண்மையில் நியமிக்கப்பட்டார்.

பதவியேற்ற பின்னர், புதிய விமானப்படைத் தளபதி சம்பிரதாய பூர்வமாக ஜனாதிபதியை சந்தித்ததுடன் நினைவுப் பரிசையும் கையளித்தார்.

புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார். (அ)

# பொருளாதார அழிவுக்கு காரணமானவர்கள் யார்?

## வெளிப்படுத்த கோருகிறார் சந்திம வீரக்கொடி

கொழும்பு, ஜுலை 07

**பொருளாதார அழிவுக்கு யார் காரணம் என்ற உண்மை விரைவில் வெளியே வரவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.**

**பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

**பாராளுமன்றில் நாம் கதைப்பதை மக்களும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். மக்கள் எதையும் மறந்துவிடவில்லை.**

நல்லாட்சி காலத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதாரத்தை அழிவுப்பதைக்கு இட்டுச் செல்கிறார் என்ற காரணத்தினால்தான் அன்று அந்த அரசாங்கத்திலிருந்து நாம் வெளியே வந்து, அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளித்தோம்.

இதனை அமைச்சர் அலி சப்ரி மறந்துவிட்டார்போல். இவையனைத்தும் வேறு யாரோ செய்ததைப் போன்றுதான் அலி சப்ரி தற்போது பேசுகிறார்.

அன்று பொருளாதாரத்தை அழித்த ஒருவரை அழைத்து வந்து, பொருளாதாரத்தை உயர்த்த இன்று இவர்கள் செயற்பட்டு வருகிறார்கள்.

மக்களுக்கு உண்மைகள் தெரியும். பொருளாதார அழிவுக்கு யார் காரணம் என்ற உண்மை விரைவில் வெளியே வரவேண்டும்-என்றார். (அ)



# மக்கள் விரட்டியடித்த நபர்களை தலைவர்களாக ஏற்க முடியாது!

## சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, ஜுலை 07

வரிவிலக்கிற்கு ஆதரவாக அன்று கையை உயர்த்திய நபர் தலைமைத்துவம் ஏற்பதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவராக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சபையில் நேற்று அறிவித்தார்.

இவ்விடயம் குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2019 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், ஓரிரு மாதங்களிலேயே வரிவிலக்கு வழங்கப்பட்டது. இதனால், 12 வீதமாக இருந்த தேசிய வருமானம் 8 வீதமாக வீழ்ச்சியடைந்தது.

இவ்வாறு 600- 700 பில்லியனுக்கு இடைப்பட்ட வரிவிலக்கு வழங்கியமைக்கு யார் பொறுப்பு? கையை உயர்த்தி இதற்கு ஆதரவு தெரிவித்தவர்கள் யார்?

ஜனாதிபதித் தேர்தலில் தங்களுக்கு நிதியுதவிகளை செய்த பெரும் முதலாளிகளுக்கு சார்பாகவே இந்த வரிவிலக்கு வழங்கப்பட்டது.

இதற்கு எதிர்க்கட்சியினர் எந்தவகையிலும் தொடர்பில்லை. இதன் விளைவாக, மக்கள் வீதிக்கு இறங்கி, 69 இலட்சம் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியையும் பதவியிலிருந்து விரட்டியடித்தார்கள்.



இந்தநிலையில், நாட்டின் பொருளாதார வீழ்ச்சி தொடர்பாக ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில், வரிவிலக்கிற்கு ஆதரவாக அன்று கையை உயர்த்திய நபரே தலைமைத்துவம் ஏற்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தெரிவுக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் தொடர்பாக இங்கு பிரச்சினையில்லை-என்றார். (அ)

# நுவரெலியாவில் 42 வீடுகள் சேதம்!

## சீரற்ற காலநிலையால்

கொழும்பு, ஜுலை 07

நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் நேற்று காலை வரை 59 குடும்பங்களைச் சேர்ந்த 245 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம், மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களால் 42 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

அத்துடன், 28 குடும்பங்களைச் சேர்ந்த 121 பேர் 2 பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் நேற்றும் மழை பெய்தது. மாவட்டத்துக்கான மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# நாடளாவிய ரீதியில் மின் தடை

கொழும்பு, ஜுலை 07

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் பதினான்காயிரத்திற்கும் அதிகமான மின் தடைகள் பதிவாகியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஊழல் தடுப்பு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு ஒத்திவைப்பு தொடர்பான விவாதம் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற வேளை அவர் இதனைக் கூறினார்.

குறித்த நிலமையை வழமைக்கு கொண்டுவர மின்சாரசபை ஏற்கனவே செயற்பட்டு வருவதாகவும், நுவரெலியா, கண்டி மற்றும் நீர்த்தேக்கங்களை அண்மித்த பகுதிகளிலும், அதிக மழைவீழ்ச்சி உள்ள பிரதேசங்களிலும் இந்த நிலமை காணப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# இந்தியர் கொழும்பில் கொலை; மற்றோர் இந்தியர் கைதானார்

கொழும்பு, ஜுலை

கொழும்பு கோட்டை பொலிஸ் பிரிவில் காலிமுகத்திடல் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலைய தொகுதியில் உணவகம் ஒன்றில் சேவையாற்றும் இந்தியரான முகாமையாளர் அங்கு பணிப்புரிந்த மற்றுமொரு இந்தியரை கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொம்பனித்தெருவில் உள்ள உணவகத்தின் ஊழியர்கள் தங்கியிருக்கும் தொடர்மாடி குடியிருப்பில் உள்ள வீட்டில் நேற்று முன் தினம் இரவு சந்தேக நபரான முகாமையாளர் ஊழியரை கத்தியால் குத்தியுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் இருந்த ஊழியர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

29 வயதான அஜேகுமார் என்ற இந்தியரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

30 வயதான உணவகத்தின் முகாமையாளருக்கும் உயிரிழந்த ஊழியருக்கும் இடையில் உணவகத்துக்குள் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதுடன் அது மோதல் வரை சென்றுள்ளது.

இதன் காரணமாகவே இந்த கொலைச் சம்பவம் நடந்துள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான முகாமையாளர் கொலைக்கு பயன்படுத்திய கத்தியுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (அ)

# யாழ். பல்கலைக்கு துணைவேந்தராகுபவர் தமிழ் பாரம்பரியங்களை காக்கவேண்டும்

## அங்கஜன் இராமநாதன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுலை 07

யாழ். பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராக வருபவர் பல்கலைக்கழக மற்றும் தமிழ் பாரம்பரியங்களை பாதுகாப்பவராக செயற்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு தனிச் சிறப்புள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கான துணைவேந்தர் தெரிவு இடம்பெற உள்ள நிலையில் துணைவேந்தராக தேர்வு செய்யப்படுபவர் எமது வரலாறுகளை தாங்கிக் செல்பவர்களாக இருக்கவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்காக நால்வர் போட்டியிடுகின்ற நிலையில் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பப்படும்.

ஜனாதிபதி தான் விரும்புகின்ற ஒருவரை துணைவேந்தராக தெரிவு செய்யும் பொறுப்பு உள்ள நிலையில் தெரிவு அரசியல் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான தெரிவாக அமையக் கூடாது.

ஆகவே நான் இந்தக்கருத்தை அரசியல்வாதி என்ற நிலையில் பதிவு செய்யாமல் நானும் ஒரு குடிமகன் என்ற நீதியில் எமது மரபுகள் சம்பிரதாயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நீதியில் பதிவு செய்கிறேன்-என்றுள்ளது. (அ)

# ஒரே இரவில் பொருளாதாரம் இங்கு வீழ்ச்சியடையவில்லை

## அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜுலை 07

ஒரு இரவில் நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடையவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு இரவில் நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடையவில்லை.

2005 இலிருந்து 2015வரை நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது, 7.2 ஆக உயர்ந்து கொண்டுதான் இருந்தது.

2015 இலிருந்து 2019 வரையான தற்போதைய எதிர்க்கட்சியினரின் ஆட்சிக் காலத்தில்தான், 2.1 ஆக பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்தது.

14.5 பில்லியன் டொலரை இவர்கள் அன்று கடனாகப் பெற்றார்கள்.

அப்போது கொரோனா பிரச்சினையோ, ஈஸ்டர் தாக்கு தல் சர்ச்சையோ, போராட்டங்களோ, ரஷ்யா- உக்ரைன் யுத்தமோ இடம்பெறவில்லை.

எனவே, நல்லாட்சி அரசாங்கத்தினரும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

பொய்யான கதைகளைக் கூறி, கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தை இவர்கள் இடைநிறுத்தினார்கள்.

இடைநிறுத்தப்பட்டு ஒன்றரை வருடங்களின் பின்னர் தான் இத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

எவ்வளவு முதலீடுகள் இதனால் பாதிக்கப்பட்டன? எனவே, இங்கு யாரும் நல்லவர்கள் கிடையாது.

40, 50 வருடங்களாக நாட்டில் இருந்த அரசாங்கங்களின் செயற்பாடுகளின் விளைவாகத் தான் இன்று பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது-என்றார். (அ)

# தகவல்கள் தவறு என்றால் சிறைக்கு செல்ல நேரிடும்!

## பாராளுமன்ற அதிகாரிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை 07

**இலங்கை பாராளுமன்றம் ஒரு உயரிய நிறுவனம். அது பிரதேசசபை அல்ல எனவே பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தவறான தகவல்களை வழங்கினால் இரு வருடங்கள் சிறைதண்டனைக் கிடைக்கும் என பாராளுமன்றத்தின் அதிகாரிகளை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஆணையாளர் கிஷாலி எச்சரித்தார்.**

ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரியாக கூறப்படும் சஹ்ரான் ஹாசிமின் மனைவியான அப்துல் காதர் பாதிமா ஹாதியா உள்ளிட்ட 8 பேர், ஈஸ்டர் தாக்குதலை விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக வழங்கிய சாட்சியங்களின் பிரதிகளை தனக்கு வழங்க வேண்டுமென, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்திடம் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன கோரியிருந்தார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா, ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, நௌபர் மௌலவி, கபூர் மாமா உள்ளிட்ட 8 பேர், ஈஸ்டர் தாக்குதலை விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக வழங்கிய சாட்சியங்களின் பிரதிகளே இவ்வாறு கோரப்பட்டிருந்தது.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர் கோரிய கேள்விக்கு, பாராளுமன்றம் வழங்கிய பதில் திருப்தியில்லை என்பதால் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்துள்ளார்.

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் செய்யப்பட்ட இந்த மேன்முறையீடு பல தடவைகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த நிலையில், நேற்று முன் தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்றைய விசாரணையின் போது தன்னுடைய சட்டத்தரணியுடன் ஊடகவியலாளர் தரிந்துவும் பாராளுமன்றத்தின் தகவலறியும் உரிமைக்கான விசேட பிரிவின் தலைவரும் பிரதிப் பணிப்பாளருமான (நிர்வாகம்) சாமா எம்பெர்ணான்டோ உள்ளிட்டோரும் ஆணைக்குழு முன்பாக ஆஜராகியிருந்தனர்.

ஊடகவியலாளரால் கோரப்படும் தகவல்கள், பாராளுமன்றத்தின் உடைமையில், கட்டுக்காப்பில், கட்டுப்பாட்டில் இல்லை என பாராளுமன்றம் நிரூபிக்க தவறிவிட்டதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.

ஆனால், இதனை மறுத்த பாராளுமன்ற அதிகாரிகள் ஊடகவியலாளரால் கோரப்படும் தகவல்கள் தங்களிடம் இல்லை என்றே கூறினார்கள்.

இதன்போது குறுக்கீடு செய்த ஊடகவியலாளர் தரிந்து, "சஹ்ரானின் மனைவி உள்ளிட்டோர் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முன்பாக வழங்கிய சாட்சியங்களின் பிரதிகளை ஆரம்பத்தில் நான் கேட்டபோது, இந்தத் தகவல்களை வழங்கினால் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மீறப்படும் என்றே பதில் வழங்கினார்கள். அப்படி என்றால் நான் கோரும் தகவல்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறது என்று தானே அர்த்தம்.

இந்த விடயத்தில் பாராளுமன்ற ஒரு நிலைப்பாட்டில் இல்லை. அடிக்கடி நிலைப்பாட்டை மாற்றி வருகிறது." என்று கூறி தனது வாதத்தை முன்வைத்தார்.

தகவலறியும் உரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'உடைமையில்', 'கட்டுக்காப்பில்', 'கட்டுப்பாட்டில்' என்கிற வசனங்களுக்கான அர்த்தம் என்னவென்று தெரியுமா? என, பாராளுமன்றத்தின் தகவலறியும் உரிமைக்கான விசேட பிரிவின் தலைவரிடம், தகவலறியும் ஆணைக்குழுவின் ஆணையாளர் கிஷாலி கேள்வி எழுப்பினார்.

ஆனால், பாராளுமன்றத்தில் இருந்து வந்திருந்த அதிகாரிகள் இதற்கு பதில் வழங்க முடியாமல் தடுமாறினார்கள்.

இலங்கையின் உயரிய நிறுவனமான பாராளுமன்றத்தின் அதிகாரிகளுக்கு தகவலறியும் உரிமைச் சட்டம் பற்றிய அடிப்படை அறிவுகூட இல்லையா? எனவும் கிஷாலி கடுந்தொனியில் கேள்வி எழுப்பினார்.

ஊடகவியலாளர் கோரும் தகவல்கள் பாராளுமன்றத்தின் 'தடுப்பில்' உள்ளது. ஆனால், உடைமையில், கட்டுக்காப்பில், கட்டுப்பாட்டில் இல்லை என ஊடகவியலாளருக்குப் பாராளுமன்றம் வழங்கிய பதிலை சுட்டிக்காட்டிய ஆணையாளர் கிஷாலி,

"அது என்ன Detention (தடுப்பில்) என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள்? தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் ஹுதவநவெழை என்ற வசனம் பயன்படுத்தப்பட்டுள்ளதா?" எனவும் கேள்வி எழுப்பினார்.

இலங்கை பாராளுமன்றம் ஒரு உயரிய நிறுவனம். அது பிரதேச சபை அல்ல. எனவே பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தவறான தகவல்களை வழங்கினால் இரு வருடங்கள் சிறைத் தண்டனை கிடைக்கும் எனவும் பாராளுமன்றத்தின் அதிகாரிகளை ஆணையாளர் கிஷாலி எச்சரித்தார்.

ஊடகவியலாளரால் கோரப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் பாராளுமன்றத்தின் இறுதி நிலைப்பாட்டை ஒகஸ்ட் 04ஆம் திகதிக்கு முன்னர் தகவலறியும் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும் எனக்கூறி இந்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகளை, தகவலறியும் ஆணைக்குழு நிறைவுக்குக் கொண்டுவந்தது.

பாராளுமன்றத்தின் இறுதி நிலைப்பாடு கிடைத்த உடன் இந்த மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு அறிவிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

(அ)

# மலைநாட்டின் அழகை நேரில் பார்த்து பிரமித்துப்போன வெளிநாட்டு தூதுவர்கள்

கொழும்பு, ஜுலை 07

75 வருட சுதந்திரம் மற்றும் இராஜதந்திர உறவை கொண்டாடும் வகையில் வெளிநாட்டுத் தூதுவர்கள் மலைநாட்டில் நட்புரீதியான சுற்றுப்பயணம் மேற்கொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

புதுடில்லியில் இருந்து கடமையாற்றும் 09 வெளிநாட்டுத் தூதுவர்களுக்கென "எல்ல ஒடிஸி" விசேட நட்புறவு சுற்றுப் பயணமொன்று வெளிவிவகார அமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் என்பவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அழகிய மலைநாட்டைக் கண்டுகளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயணம் ஜுலை முதலாம் திகதி முதல் 03ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது.

காலனித்துவ காலத்தை நினைவுகூரும் விசேட ரயிலான வைஸ்ரொயிஸ் விசேட ரயிலில் தூதுக்குழுவினர் பயணம் செய்தனர்.





இராஜதந்திரக் குழுவினர் கண்டியில் இருந்து நுவரெலியா வரை குளிர் மலைப்பகுதிக்கு பயணித்ததோடு, இலங்கையின் அழகையும் விருந்தோம்பலையும் அனுபவித்தனர்.

மேலும், பேத்ரோ தேயிலை தோட்டத்தில் உலகப் புகழ் பெற்ற "சிலோன் டீ" தேநீரை தூதுவர் குழுவினர் சுவைத்துள்ளனர்.

இந்த விசேட சுற்றுப் பயணத்திற்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் என்பன அனுசரணை வழங்கியிருந்தன.

இதேவேளை, சர்வதேச சமூகத்துடனான 75 ஆண்டுகால ஆக்கபூர்வமான ஈடுபாட்டை நினைவு கூரும் வகையில் இந்த மலைநாட்டு சுற்றுப்பயணம் அமைந்ததோடு, இலங்கையிலுள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களின் மதிப்பு மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் உதவுவதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

(அ)

# கொள்ளையர்களை போன்று நடக்கும் லீசிங் நிறுவனங்கள்

## மைத்திரிபால விசனம்

கொழும்பு, ஜுலை 07

பல லீசிங் நிறுவனங்கள் தற்போது கொள்ளையர்களை போல் செயற்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணைகள் தாமதமாவது தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே முன்னாள் ஜனாதிபதி இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வங்கிகளில் கடனைப் பெற்றவர்களின் சொத்துக்களை ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமாயின் அதற்கு போதுமான காலத்தை வழங்கவேண்டும்.

வழக்குகள் ஏன் அதிகரிக்கின்றன என்பதை ஆராயவேண்டும். போதைப் பொருள் பிரச்சினை வழக்குகள் அதிகரிக்க பிரதான காரணமாக மாறியுள்ளது.

சிங்கப்பூரில் ஒரு வழக்கை விசாரித்து முடிக்க மூன்று மாத காலம் செல்லும். வழக்குகள்



அதிகரிக்க வறுமையும் பிரதான காரணம்.

வறியவர்களே அதிகளவில் நீதிமன்றங்களில் காணப்படுகின்றனர். குறைந்தளவிலேயே பணக்காரர்கள் நீதிமன்றத்திற்குச் செல்கின்றனர்.

காணி வழக்குகள் மிக நீண்டகாலம் விசாரிக்கப்படுகின்றன. வழக்கு விசாரணைகள் நீடிப்பதால், சிறைச்சாலைகளில் இடநெரிசல் அதிகரிக்கின்றது.

வழக்குகள் நீடிக்கப்படுவதை சட்டத்தரணிகள் விரும்புகின்றனர். லீசிங் நிறுவனங்கள் தற்போது நடந்துக்கொள்ளும் விதம் தவறானது. ஒரு புறம் அது கொள்ளையடிப்பு போன்றது-என்றார்.

(அ)

# ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிக்கு சொந்தமான விடுதியில் விபசாரம்!

கொழும்பு, ஜுலை 07

ஓய்வுபெற்ற உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் வவுனியாவில் நடத்தி வரும் தங்கும் விடுதியை சோதனையிட்ட பொலிஸார், அங்கு பாலியல் தொழிலில் ஈடுபட்டு வந்த நான்கு பெண்கள் உட்பட 5 பேரை கைது செய்துள்ளனர்.

விடுதிக்கு பெண்கள் சென்று பாலியல் தொழிலில் ஈடுபடுவதாக வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து, அங்கு சென்று சோதனை நடத்தியுள்ளனர்.

கை செய்யப்பட்டுள்ள பெண்கள் 22 முதல் 33 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் கைது செய்யப்பட்ட நபர், விடுதியின் முகாமையாளராக பணியாற்றுபவர் எனவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மருத்துவப் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ)

# யூத இனப்படுகொலையில் இருந்து தப்பித்த மூன்று சிறுமிகள்: 84 ஆண்டுகளுக்கு பின் மர்மம் விலகியது எப்படி?

ஜோ லான்ஸ்டேல், ஜேன் டவுன்ஸ்

இரண்டாம் உலகப்போர் தொடங்கிய கால மான 1939 இல் ஜெர்மனியின் நாஜி அரசாங் கம், அந்த நாட்டில் இருந்த யூத இன மக்களை அழிக் கும் கொடூரமான செயலை மேற்கொண்டது. ஜெர்மனி யின் இந்த மோசமான நடவடிக்கையில் இருந்து யூத மதத்தை சேர்ந்த குழந்தைகளை காப்பாற்றும் திட்டத்தை பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் செயல்படுத்தின.

அந்த மோசமான தருணத்தில் உயிர் பிழைக்கும் நோக்கில் ஜெர்மனியில் இருந்து வெளியேறிய யூத இனத்தை சேர்ந்த மூன்று சிறுமிகளின் புகைப்படம், யூத இன அழிப்பின் ஓர் நினைவுச் சின்னமாக உலகெங்கும் உள்ள பல்வேறு அருங்காட்சியகங்கள், கண்காட்சிகள் மற்றும் புத்தகங்களில் இடம்பெறும் அளவுக்கு வரலாற்று


7673
This document of identity is issued with the approval of His Majesty's Government in the United Kingdom to young persons to be admitted to the United Kingdom for educational purposes under the care of the Inter-Aid Committee for children.
THIS DOCUMENT REQUIRES NO VISA.
PERSONAL PARTICULARS
Name ADAMECZ
Sex FEMALE Date of Birth
Place BRESLAU
Full Names and Address of Parents
ADAMECZ PAUL, IRMA
BRESLAU

முக்கியத்துவம் பெற்றுள்ளது.

லண்டனின் லிவர்பூல் ஸ்ட்ரீட் ரயில் நிலையத்தில் எடுக்கப்பட்ட அந்த புகைப்படத்தில் இருக்கும் சிறுமி கள் யார் என்பது குறித்த மர்மம் 80 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கொண்டிருந்தது.

**ரயிலில் நிகழ்ந்த சிறுமிகளின் சந்திப்பு**

அடமெக்ஸ் எனும் இயற்பெயர் கொண்ட இன்கே ஹாமில்டன் என்ற மூதாட்டிக்கு தற்போது 89 வயதாகி றது. தெற்கு லண்டனில் வாழ்ந்து வரும் யூத குலத்தைச் சேர்ந்த இவர் 1939 இல் ஜெர்மனியில் நாஜி அரசாங்கத் தின் இன அழிப்பில் இருந்து தப்பிக்க, தனது 5 ஆவது வயதில், 10 வயதான தன் மூத்த சகோதரி ரூத் உடன் ஜெர்மனியின் ப்ரெஸ்லாவ் நகரில் இருந்த தனது வீட்டை விட்டு வெளியேறினார். ஆனால் இன்கேவின் இளைய சகோதரியும், அவரது தாயும் நாட்டை விட்டு வெளியே றாததால், ஜெர்மனி அவுஷ்விட்ஸ் வதை முகாமில் இருந் தபோது கொல்லப்பட்டனர்.

பிரிட்டன் நோக்கிய தனது சகோதரி உடனான இன் கேவின் ரயில் பயணத்தில் அவர்களுடன் ஜெர்மனியின் ஹாலே நகரைச் சேர்ந்த மற்றொரு சிறுமி சேர்ந்து கொண்டாள். தனது இரட்டை சகோதரனான ஹன்ஸ் உடன் பயணித்த அவளுக்கு அப்போது 10 வயது. ஹன்னா கோன் என்ற அந்த சிறுமி தனது கையில் பொம்மை ஒன்றை வைத்திருந்தாள்.

மூன்று சிறுமிகளும் பிரிட்டனின் லிவர்பூல் ஸ்ட்ரீட் ரயில் நிலையத்தை அடைந்தனர். அங்கு மூவரும் ஒன் றாக வீற்றிருந்தபோது புகைப்படம் ஒன்று எடுக்கப்பட் டது.

ஆனால் அந்த புகைப்படம் எதற்கு, யாரால் எடுக்கப் பட்டது என்பது குறித்தும், அதன் முக்கியத்துவம் பற்றி யும் மூன்று சிறுமிகளும் தங்களது முதுமைப் பருவம் வரை அறியாமலேயே இருந்தனர்.

**லண்டன் பல்கலைக்கழகத்தில் ஹன்னா கோன்**

ஜெர்மனியில் இருந்து பிரிட்டனுக்கு ஒன்றாக வந்த மூன்று சிறுமிகளில் ஹன்னா கோன் கடந்த 2018 இல் மரணமடைந்தார். அதற்கு முன் ஒரு முறை அவர், ஜெர்ம



னியில் இருந்து சிறு வயதில் தாங்கள் தப்பித்து பிரிட்டன் வந்தடைந்தது குறித்து லண்டன் பல்கலைக்கழகத்தில் அளித்த பேட்டியின் போது நினைவுகூர்ந்தார்.

அப்போது அவர், "நாங்கள் ஹாலந்து வழியாக பிரிட்டனுக்கு பயணித்தபோது அங்கிருந்த பெண்கள் எங்களுக்கு ரொட்டியும், எலுமிச்சை பழங்களையும் அளித்து அன்பு பாராட்டினர். ஜெர்மனியின் ஹார்விச்சி லிருந்து பிரிட்டனின் லிவர்பூல் ஸ்ட்ரீட்டுக்கு ரயிலில் நாங்கள் பயணித்த பெட்டியில் இருந்த இருக்கைகள் மரத்தால் செய்யப்பட்டவையாக இல்லை. அதில் இருந்தே நாங்கள் முதல் வகுப்பு பெட்டியில் தவறாக ஏறிவிட்டோம் என்பதை அறிந்து கலக்கம் அடைந்தேன்.

முதலில் லண்டனுக்கு பயணிப்பதாக எண்ணியிருந்த நிலையில், பின்னர் லிவர்பூலுக்கு பயணிப்பதாக அறிந்த தும் அதுகுறித்து வருத்தமடைந்தேன். லிவர்பூல் பிரிட்



டனில் இல்லாமல் வேறு எங்கோ இருப்பதாக எண்ணி யிருந்தேன். எனது பயணம் முழுவதும் கையில் ஒரு பொம்மையை வைத்திருந்தேன். அதற்கு ஈவ்லின் என் றும் பெயரும் இட்டிருந்தேன்" என்று சிறுவயதிலேயே தான் அகதியான துயரச் சம்பவத்தை நினைவுகூர்ந்திருந் தார் ஹன்னா கோன்.

**லண்டன் கண்காட்சியில் காணக்கிடைத்த அரிய புகைப்படம்**

இந்த நிலையில் தான், ஜெர்மனியின் யூத இன அழிப் பில் இருந்து தப்பித்து பிரிட்டனில் தஞ்சம் அடைந்தவர் கள், அங்கு வந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் வகையில், லண்டனில் உள்ள கேம்டன் நூலகத்தில் புகைப்பட கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அப்போது தான் ஹன்னாவின் சகோதரர் ஹன்ஸ், அந்த கண்காட்சியில் இடம்பெற்றிருந்த அந்த அதிசய புகைப்படத்தை முதல் முறையாக கண்டு வியந் தார். அதில் தனது தங்கை சிறுமியாக இருந்ததை கண்டு இன்ப அதிர்ச்சி அடைந்த தருணத்தை வியப்புடன் அவ ரிடம் விவரித்தார்.

தன் சகோதரர் சொன்னதை கேட்டதும் இருப்பு கொள்ளாத ஹன்னா, தனது இரட்டை மகள்களுடன் கண்காட்சிக்கு சென்று அந்த அரிய புகைப்படத்தை கண்டு அதிசயித்தார்.

"அந்த புகைப்படத்தில் எங்களின் அம்மா, இரட்டை ஜடையுடன் கையில் ஓர் பொம்மையுடன் குட்டிப் பெண்ணாக வீற்றிருந்தார். அதில் அவருக்கு அருகே இருந்த மற்ற இரண்டு சிறுமிகள் யார் என்பதையும், அவர்கள் தற்போது எங்கு, எப்படி இருக்கின்றனர் என் பது குறித்து அறியும் ஆவல் எங்கள் தாய்க்கு மேலோங்கி யது" என்கிறார் ஹன்னாவின் மகளான டெபி.

**பிபிசியில் பேசிய ஹன்னாவின் மகள்கள்**



அதையடுத்து, அந்த ஆண்டு ஜனவரி மாதம் **The Girls: A Holocaust Safe House** என்ற தலைப்பில் பிபிசியில் ஆடியோ தொடரில், 80 ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்டு, தற்போது கேம்டன் நூலகத்தில் உள்ள புகைப்படம் குறித்து ஹன்னாவின் மகள்கள் பேசினர். அதன் பயனாக, அந்த புகைப்படத்தின் பின்னணி குறித்த தகவல் வெளி உலகிற்கு தெரிய வந்தது.

ஜெர்மனியின் வதை முகாம்களில் வைத்து யூத குல மக்கள் அழிக்கப்பட்டதன் நினைவு நாள் அன்று, அது தொடர்பாக பிபிசி இணையதளத்தில் இடம்பெற்றிருந்த செய்திக்கான இணைப்பை (லிங்க்) ஹென்னாவின் மகளான ஹெலனின் தோழி ஒருத்தர் அவருக்கு அனுப்பி இருந்தார்.

"இதை ஏன் அவள் எனக்கு அனுப்பி இருக்கிறாள் என்று எண்ணியவாறு அதை திறந்து பார்த்தபோது எங்களுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. எங்கள் அம்மாவின் சிறுவயது புகைப்படத்தில் அவருடன் இருந்த மற்ற இரண்டு சிறுமிகளில் ஒருவரின் பெயர் ரூத் என்றும், மற்றொருவரின் பெயர் இன்கே என்று குறிப்பி டப்பட்டிருந்ததை கண்டு நாங்கள் மிகவும் வியப்படைந் தோம். உடனே அந்த சந்தோஷமான தகவலை எனது சகோதரி டெபிக்கு தெரியப்படுத்தினேன்" என்கிறார் ஹெலன் உணர்ச்சி ததும்ப.

**தாயின் ரயில் சிநேகிதியை சந்தித்த மகள்கள்**

இறுதியில், சில மாதங்களுக்கு பின் ஏப்ரலில் இன்கே மற்றும் ஹன்னா மகள்களின் சந்திப்பு லண்டனில் உள்ள இம்பீரியல் போர் நினைவு அருங்காட்சியகத்தில் நிகழ்ந் தது. அங்கு ஹன்னா, ரூத் மற்றும் இன்கே சிறுமிகளாக இருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பார்வைக்கு வைக்கப்பட்டுள் ளது. மேலும், மூன்று பேரின் குடும்பங்கள் குறித்து விவரிப்பதாகவும், அந்தப் புகைப்படம் எடுக்கப்பட்ட பின் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை பற்றியும் விவரிக்கும் சாசனமாக அந்த புகைப்படம் திகழ்ந்தது.

"எங்கள் அம்மா உங்களை பற்றியும், ரூத் குறித்தும் எப்போதும் பேசிக் கொண்டிருப்பார். உங்களை நாங் கள் இன்று கண்டுபிடித்ததை அறிந்து அவரின் ஆன்மா எங்களை பெருமையாக கருதும். நீங்கள் எங்கள் வாழ்க் கையில் மிகவும் முக்கியமான நபர்" என்று டெபி இன்கே விடம் பூரிப்புடன் தெரிவித்தார்.

**அந்த புகைப்பட கலைஞர் யார்?**

சிறுமியாக இருந்தபோது ஜெர்மனியில் இருந்து தப்பித்து பிரிட்டனுக்கு வந்த இன்கேயை பல தசாப்தங் களுக்கு பிறகு ஹன்னாவின் மகள்கள் சந்தித்தனர். இந்த சிறப்புமிக்க சந்திப்புக்கு காரணமாக விளங்கிய அந்த அரிய புகைப்படத்தை எடுத்தவர் யார் என்ற கேள்வி, அனைவரின் மனதிலும் எழுந்தது.

ஹல்டன் ஆவணக் காப்பகத்தில் கிடைக்கப்பெற்ற பதிவுகளின் மூலம், இன்கே, ஹென்னா மற்றும் ரூத் சிறுமிகளாக இருந்தபோது அவர்களின் புகைப்படத்தை எடுத்த கலைஞர் ஸ்டீபன்சன் என்பதும், அவர் 1000க்கும் மேற்பட்ட புகைப்பட நிருபர்கள் பணியாற்றிய டாப்பிக் கல் பிரஸ் ஏஜென்சியில் (**Topical Press Agency**) பணி யாற்றியவர் என்பதும் தெரிய வந்தது.

அத்துடன், 1939 ஜூலை 5 ஆம் தேதி அன்று, அவரு டைய பணி குறித்த பதிவேட்டில் "**Three little children waiting at Liverpool Street Station**" என்ற விளக்கத்துடன் புகைப்படம் ஒன்று எடுக்கப்பட்டதாக வும் அதை எடுத்தவர் ஸ்டீபன்சன் என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது. தி நியூஸ் க்ரோனிக்கல் எனும் பிரிட்ட னின் தேசிய நாளிதழில் அப்புகைப்படம் மறுநாளே வெளியா னது. அதன் பிறகு பல்வேறு நாளிதழ்கள், கண்காட்சிகளி லும் அப்புகைப்படம் இடம்பெற்றது.

மூன்று சிறுமிகளின் புகைப்படத்தை எடுத்தவர் ஸ்டீ பன்சன் தான் என்பதை உறுதியாக சொல்ல முடியாவிட் டாலும். பணி பதிவேட்டில் இருந்த குறிப்புகளின் படி ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜான் எஃப் ஸ்டீபன்சன் என்ற முழு பெயரை கொண்ட புகைப்பட கலைஞர் தான் அந்த புகைப்படத்தை எடுத்திருந்த அதிக வாய்ப்பு உள் ளது என்பதும், அவர் பிரிட்டனில் ஒரு காலத்தில் பிர பலமான '**ear Old Glasgow Toon**' என்ற பாடலை எழுதியவர்களில் ஒருவராக திகழ்ந்தார் என்பதும் தெரிய வந்தது. அதற்காக, டாப்பிக்கல் பிரஸ் ஏஜென்சி கிளாஸ் கோவில் அவருக்கு பாராட்டு விழாவும் நடத்தியது..



ஈழநாடு



# பனையை பற்றி தெரியாதவர் அபிவிருத்தி சபை தலைவர்!



## நிர்வாக சீர்கேட்டை சுட்டிக்காட்டும் சுரேஷ்

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வரும் பனை அபிவிருத்திச் சபையின் நிர்வாகச் சீர்கேட்டையும் முறையற்ற நியமனங்களையும் நிறுத்தி, பனை அபிவிருத்திச் சபையை வினைதிறன் மிக்கதாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் விவரம் வருமாறு: -

பனை அபிவிருத்திச் சபையானது 1978ஆம் ஆண்டு தென்னை அபிவிருத்திச் சட்டத்தின்கீழ், யாழ்ப்பாணத்தை தலைமை அலுவலகமாகக் கொண்டு, பனையை நம்பிவாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் எனவும் பனை வளம் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் எனவும் உருவாக்கப்பட்ட ஒரு சபையாகும்.

இலங்கையின் பனை வளமானது முழுமையாக வடக்கு-கிழக்கையே சார்ந்துள்ளது. ஏறத்தாழ 11இலட்சம் பனை வளம் இங்கு இருப்பதாக அறியப்படுகிறது. ஆனால், இதைக்கொண்டு நடத்தும் பனை அபிவிருத்திச் சபையானது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் சங்கங்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு பனை வளத்தினை நம்பி வாழும் குடும்பங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பனைவள அபிவிருத்தியும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றது.

பனை வள உற்பத்தி மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தி மட்டங்கள் ஒப்பீட்டளவில் கடந்த காலங்களைவிட மிகவும் குறைவாகவே காணப்படுவதுடன், பனை வளத்தினைக் கொண்டு பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்கள் உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தும் அவற்றின் உற்பத்தி ஊக்குவிக்கப்படுவதில்லை.

முதலாவதாக, வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் இதன் தலைமைச்செயலகம் இருந்தபோதிலும்கூட, பல இலட்ச ரூபாய் வாடகையில் கொழும்பில் இன்னொரு தலைமைச் சங்கம் இயங்கி வருகிறது. இதன் காரணமாக, மிகப்பெருமளவிலான பனை வளத்தினை வடமாகாணம் கொண்டிருந்தபோதிலும்கூட, அதன் பலன் மக்களைச் சென்றடையவில்லை.

பனை மரத்தைப் பற்றியோ அதன் பயன்பாடு பற்றியோ அறியாத சிங்கள மொழிபேசும் தென்பகுதியைச் சார்ந்த ஒருவரை பனை அபிவிருத்திசபையின் தலைவராக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நியமித்தமை தவறானது. அவர் தென்பகுதியைச் சார்ந்தவராக இருப்பதால், தேவைக்கு மேலதிகமான வாடகையைக் கொடுத்து கொழும்பில் நிர்வாகத்தை நடத்துவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

நாடு இன்று எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த தேவையற்ற செலவானது நாட்டின் பொருளாதார சீர்கேட்டுக்கு மேலும் உரமூட்டுவதுடன், பனைத் தொழிலை நம்பி வாழும் வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தையும் கடுமையாக பாதித்துள்ளது. வடக்கு-கிழக்கில் பனை வளத்துடன் ஈடுபாடுகொண்ட படித்த தகுதி வாய்ந்த இளைஞர்கள் யுவதிகள் ஆயிரக்கணக்கில் இருக்கையில் இந்தத் துறையுடன் தொடர்பில்லாத 250க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர் யுவதிகளை பனை அபிவித்திச்சபை உள்வாங்கியிருப்பதும் இவர்களும் பெருமளவில் கொழும்பை மையமாகக் கொண்டு பணியாற்றி வருவதும் பனை அபிவிருத்திச் சபை கீழ்நோக்கிச் செல்வதற்குக் காரணமாக அமைகின்றது.

பனை அபிவிருத்திச் சபையானது கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக, பருத்தித்துறை, திக்கம் பிரதேசத்தில் ஒரு வடிசாலையை நடத்தி வந்தது. மிகவும் இலாபகரமாக இயங்கிவந்த இந்த வடிசாலையினால் 3000 தொழிலாளர்கள் பயன்பெற்று வந்தார்கள். இந்த வடிசாலையானது பல்வேறு சந்தர்ப்பங்களில் வடக்கில் பொறுப்பாக இருந்த அமைச்சர்களினால் சூறையாடப்பட்டது. இவ்வளவு கொள்ளைகளும் சூறையாடல்களும் இடம்பெற்ற பின்னரும்கூட அது தொடர்ந்தும் இலாபத்திலேயே இயங்கி வந்தது.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக வடிசாலை மூடப்பட்டதன் காரணத்தினால் இந்த வடிசாலைக்கு கள்ளை விநியோகித்து வந்த தொழிலாளிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் நடத்தி வந்தது. வடிசாலைக்கான உரிமம், பனம் சாராயத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம், அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கும் விற்பதற்குமான உரிமம் அனைத்தும் பனை அபிவிருத்திச் சபையின் பெயரில் சமாசங்களிடமே இருந்தது. ஆனால் இப்பொழுது இருக்கின்ற பனை அபிவிருத்திச் சபையின் தலைவரான சிங்களப் பெருமகன், இந்த உரிமங்களை சிங்கள நபர் ஒருவருக்கு அளித்துள்ளதாக அறியமுடிகிறது. இதனால் பனை வளச் சங்கங்கள் சமாசங்கள், அதன் கூட்டுறவு நடவடிக்கைகள் அனைத்தும் முடக்கப்படுவதுடன் இந்த சகல வருமானங்களையும் ஒரு தனிநபருக்கு அளிக்க முற்பட்டமையானது ஒட்டுமொத்த பனை அபிவிருத்தி முயற்சியையும் சீர்குலைக்கும் செயற்பாடாகும்.

இந்த நடவடிக்கைகளின் காரணமாக, பனம்பொருள் உற்பத்தியும் அதன் ஏற்றுமதியும் மிக மோசமாகப் பாதிப்படைந்திருப்பதுடன், நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதற்கும் பங்களித்துள்ளது.

அமைச்சர்களின் அற்பத்தனமான, முன்யோசனையற்ற பதவி வழங்கல்களானது பனைவள அபிவிருத்தியை எவ்வளவுதூரம் பாதித்திருக்கிறது என்பதை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் புரிந்துகொள்ளவேண்டும். அரசியல் ரீதியான முறையற்ற முகாமைத்துவமும், சீரற்ற நிர்வாக முகாமைத்துவமும் இலங்கையின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்திருக்கிறது என்பதை கடந்த இரண்டு வருடங்களாக நாட்டு மக்கள் அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையில், பனைவள அபிவிருத்திச் சபைக்கான அதனை திறம்பட நடாத்துவதற்கான இலாபமீட்டும் ஒரு துறையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மேற்கொள்ள வேண்டும்.

1. வடக்கு மாகாணத்தின் தலைமைச் செயலகத்தை வினைதிறனாக இயங்க வைப்பதுடன் பல இலட்சங்களை வாடகையாக விழுங்கி ஏப்பம்விடும் கொழும்பு செயலகம் மூடப்படுவதுடன் அங்குள்ள அனைத்து கட்டமைப்புகளும் ஏற்கனவே உள்ள அரச ஆணைகளுக்கிணங்க, யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

2. பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக பனை வளத்தில் பரிச்சியமும் அத்துறையை அபிவிருத்தி செய்வதில் ஊக்கமும் அனுபவமும் கொண்ட சரியான நபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

3. பனைவள கூட்டுறவு சபைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் பனை வளத்தை அடிப்படையாகக் கொண்ட சங்கங்கள், சமாசங்கள் அதற்கென வழங்கிவரும் உதவிகள் ஒத்தாசைகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

4. திக்கம் வடிசாலைக்குரித்தான அனைத்து உரிமங்களும் வழங்கப்பட்டு முன்னர் இதனை இயக்கிவந்த சமாசங்களுக்கே இவற்றைத் தொடர்ந்தும் இயக்குவதற்கான அனுமதி அளிக்கப்படவேண்டும்.

5. நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் அதிகளவு அக்கறை கொண்டுள்ளதாகக் கூறிக்கொள்ளும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் இதில் கூடுதல் கவனம் செலுத்தி பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு கோருகின்றோம்.

6. தனியாரை ஊக்குவித்து கூட்டுறவுத் துறையை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளைக் கைவிட்டு, கூட்டுறவுத்துறையை ஊக்குவித்து அவற்றை ஏற்கனவே இருந்ததுபோல் இலாபமீட்டும் துறையாகவும் வினைதிறன் மிக்கதாகவும் செயற்படுவதற்கு உதவுமாறு சகலரையும் கோருகிறோம்- அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)



# மட்டு. கிண்ணம் உதைபந்தாட்ட தொடர் அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு நேற்று

மட்டக்களப்பு, ஜூலை 07

மட்டு. கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

டான் தொலைக்காட்சி குழுமம் மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் மட்டு. கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட தொடரை நடத்தி வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்டத் துறையின் வளர்ச்சிக்காக நடத்தப்படும் இந்தத் தொடரில் இந்த ஆண்டு 32 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்கின்றன.




தொடரில் மோதவுள்ள அணிகளுக்கான போட்டி அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது. உதைபந்தாட்டப் போட்டிக்கான அட்டவணை தயாரிக்கும் நிகழ்வு சுற்றுப் போட்டியின் குழுத் தலைவர் உதயராஜ் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவர் எம்.உதயகுமார், சங்கத்தின் செயலாளர் காந்தன், டான் தொலைக்காட்சி குழுமத்தின் மட்டக்களப்பு பணிமனை முகாமையாளர் அனன்சியா அவுட்ஸ்கோன் ஆகியோருடன் இந்தத் தொடரில் பங்கேற்கும் கழகங்களின் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

நாளை சனிக்கிழமை ஆரம்பமாகும் மட்டு கிண்ணம் உதைபந்தாட்டத் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் தொடர்ச்சியாக நடைபெறும். (ஐ)

# ஆடைகள் உற்பத்தி ஆலைகளின் எண்ணிக்கை 25 வீதமாக குறைவு

கொழும்பு, ஜூலை 07

இந்த நாட்டில் நிறுவப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் மொத்த கொள்ளளவில் 25 வீதத்துக்கும் குறைவானவையே உற்பத்தியில் ஈடுபடுவதாக தெரியவந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிப்பதற்கான துறைசார் கண்காணிப்புக் குழு சமீபத்தில் கூடியபோதே இது தெரியவந்துள்ளது.

அதன்படி, இலங்கைக்கு அதிகளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் ஐக்கிய ஆடை உற்பத்தியாளர் மன்றம், ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கைத்தொழில்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

அதன்போது, பொருளாதார நெருக்கடியின் தாக்கம் காரணமாக இலங்கையில் நிறுவப்பட்ட பல ஆடைத் தொழிற்சாலைகள் தமது தொழிற்சாலைகளை மூடியுள்ளதாக ஆடை உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமது தொழிற்சாலைகளை வெளிநாடுகளில் நிறுவியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மூலப்பொருட்கள், சுங்க வரி, மின் கட்டணம் போன்றவற்றின் விலை அதிகரிப்பால், சர்வதேச சந்தையில் அதன் போட்டித்தன்மை வெகுவாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கேள்வி வெகுவாக குறைந்துள்ளது தெரியவந்துள்ளது.

இந்த தொழிற்சாலைகள் மூலம் நாட்டில் மூன்றரை லட்சம் நேரடி வேலைவாய்ப்புகளும், மூன்று லட்சம் மறைமுக வேலை வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், பில்லியன் கணக்கான வற் வரியை மீளப் பெறாததால் தாம் எதிர்கொண்ட சிரமங்கள் தொடர்பிலும் ஆடை உற்பத்தியாளர்கள் தகவல்களை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இறக்குமதித் தடைகள் மேலும் தளர்த்தப்படும்

கொழும்பு, ஜூலை 07

இலங்கையில் நிலவும் இறக்குமதி தடைகள் மேலும் தளர்த்தப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

எனவே தற்போது மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் அடிப்படையில் விரைவில் மேலும் சில பொருட்கள் மீதான இறக்குமதி தடையும் நீக்கப்படும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் அண்மையில் 286 வகையான பொருட்கள் மீதான இறக்குமதி தடை நீக்கப்பட்டது.

இந்த ஆண்டின் இறுதியில் 800 இற்கும் அதிகமான பொருட்கள் மீதான இறக்குமதி தடை நீக்கப்படவுள்ளதாக அரசாங்கத்தின் உள்வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# கைதி தப்பினார்

கொழும்பு, ஜூலை 07

பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலை முகாமில் இருந்து கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாகவும், கைதியை தேடும் நடவடிக்கையை பொலிஸாரும் சிறைச்சாலை திணைக்களமும் ஆரம்பித்துள்ளதாகவும் சிறைச்சாலை திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறைச்சாலை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரே தப்பிச் சென்றுள்ளதாக அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (அ)






# மல்வத்தையில் புதிதாக மதுச்சாலை வேண்டாம்!

## பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!



காரைதீவு, ஜூலை 07

அம்பாறை மாவட்டத்திலுள்ள மல்வத்தை கிராமத்தில் புதிதாக மதுபானச்சாலை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த பகுதியில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் புதன்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் பெரியோர்கள், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் என சுமார் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மல்வத்தை பூர்வீக தமிழ் கிராமத்தை அழிக்க திட்டமிட்ட சதி, மதுபானச்சாலையை அமைக்க நாம் இடம் தர மாட்டோம் உட்பட பல்வேறு வாசகங்கள் ஏந்திய பதாதைகளை சுமந்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன் தினம் காலை மல்வத்தை பிரதான வீதியிலுள்ள நாற்சந்தியில் பேரணியாக வந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் இடம் பெறும் செய்தியை அறிந்த அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து வந்து கலந்து கொண்டதுடன், மக்களின் மகஜரையும் பெற்றுக்கொண்டார்.

அத்தருணத்தில் சமுக செயற்பாட்டாளர்களான வெ.ஜெயச்சந்திரன், பொன்.நடராசன், துரையப்பா காத்தவராயன், து.கஜேந்திரன், தங்கவேல் கண்ணன், கே.சுரேஸ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் தயாரித்த மகஜர் அம்பாறை அரசாங்க அதிபர், சம்மாந்துறை பிரதேச செயலாளர், பொலீஸ் பொறுப்பதிகாரி, மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் போன்றோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் அம்பாறை நகரில் ஐந்து மதுபானச்சாலைகள் இருக்கின்ற நிலையில் மல்வத்தை கிராமத்தில் மதுபானச்சாலை எதற்கு என்றும் அவர்கள் கேள்வியெழுப்பினர். (அ)



# பூநொச்சிமுனை மீனவர்களுக்கு நீர் விநியோகத் திட்டம் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூலை 07

பூநொச்சிமுனை மீனவர்களுக்கான நீர் விநியோகத் திட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுமார் 25 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் பூநொச்சிமுனை ஆழ்கடல் மீனவர்கள் மற்றும் மீனவர்கள் நன்மை அடைய உள்ளனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிதி பங்களிப்புடன் காத்தான்குடி நகர சபை மற்றும் பூநொச்சிமுனை ஆழ்கடல் மீனவர் அமைப்புக்களின் உதவியுடன் இந்த நீர் விநியோகத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது .

பூநொச்சிமுனை அல்பரக்கத் கிராம மீனவர் சங்கத்தின் செயலாளரும் சமூக செயற்பாட்டாளருமான எம்.வை.ஆதம் லெவ்வை தலைமையில் இந்த நீர்வழங்கல் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (அ)

# சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் படத்தை தனிநபர் எவரும் பயன்படுத்த முற்றாகத் தடை

அம்பாறை, ஜூலை 07

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் முகப்புத் தோற்றத்தை (பள்ளிவாசலின் படம்) எக்காரணம் கொண்டும் தனிநபர் யாரும் பயன்படுத்துவது பள்ளிவாசல் நிர்வாகத்தினால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜ/ம்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக்காலத்தில் பள்ளிவாசலின் படத்தைப் போட்டு சட்டத்திற்கு முரணான முறையில் தனிநபர் ஒருவரால் முகப்புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் படத்தினை பெரிய பள்ளிவாசலின் அனுமதி இல்லாமல் தனிநபர் யாரும் பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு மீறி பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# நீர் இல்லாமையால் வேளாண்மை பாதிப்பு

திருமலை, ஜூலை 07

திருகோணமலை - சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தில்லக்குழி, புளியங்குளம் போன்ற வேளாண்மை வெளிகளில் செய்கை மேற்கொள்ளப்பட்ட சுமார் 250 ஏக்கர் வேளாண்மை நீரின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் பாதிக்கப்பட்ட தமக்கு நீரினை விரைவாக வழங்குவதற்கும், நட்டஈட்டினை தருவதற்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென சேருநுவர- தில்லக்குழி, புளியங்குளம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

### கந்தளாய் ஆயிஷா பாடசாலைக்கு சி.சி.ரி.வி உபகரணங்கள் கையளிப்பு

திருமலை, ஜூலை 07

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட கந்தளாய் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்திற்கு தனவந்தர் ஒருவரால் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான சி.சி.ரி.வி கமெராக்களும் அதற்குரிய உபகரணங்கள் மற்றும் கூலர்களும் 05 கையளிக்கப்பட்டுள்ளன. இப்பாடசாலையில் மிக நீண்ட காலமாக காணப்பட்ட குறைபாடு தனவந்தர் ஒருவரினால் நிவர்த்திக்கப்பட்டுள்ளது.

இவ் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு அப் பாடசாலையின் அதிபர் எஸ்.சாகிதீன் தலைமையில் நடைபெற்றது. தனவந்தரான எம்.ஐ. எம் முபாரிஸ் இவற்றை வழங்கினார். (அ)

# தமிழக அமைச்சர் உதயநிதியை சந்தித்த கிழக்கு மாகாண ஆளுநர்



சென்னை, ஜூலை 07

தமிழகத்தின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

இலங்கை, தமிழ்நாட்டுக்கு மிக நெருக்கமான அயல் நாடாக இருப்பதால், இருதரப்பு உறவு பல நூற்றாண்டுகளாக தொடர்வதாகவும், தமிழ்நாட்டின் ஆதரவு இலங்கை மக்களால் எப்போதும் அங்கீகரிக்கப்பட்டு பாராட்டப்படுவதாகவும் செந்தில் தொண்டமான் உதயநிதி ஸ்டாலினிடம் தெரிவித்தார்.

# சௌபாக்கியா திட்டத்தில் ஆறு வீடுகளுக்கு அடிக்கல்

அம்பாறை, ஜூலை 07

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான சௌபாக்கியா வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பிரதேச செயலக சமூக அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட 06 வீடுகளுக்கான அடிக்கல் நடும் ஆரம்ப நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.



சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ. எல்.ஜவ்பரின் நெறிப்படுத்தலிலும், சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம் தலைமையிலும் இந்நிகழ்வு நடைபெற்றது. (அ)

# வோக்னர் தலைவர் ரஷ்யாவில்தான்!

## பெலாரஸ் ஜனாதிபதி

**மின்ஸ்க், ஜுலை 07**

**வோக்னர் தனியார் இராணுவத்தின் தலைவர் எவ்ஜெனி ப்ரிகோஜின் பெலாரஸில் இல்லை என்று பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ தெரிவித்துள்ளார்.**

**நேற்று மின்ஸ்கில் வெளிநாட்டு மற்றும் பெலாரஷ்ய பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் இதனை கூறினார்.**



"இன்று தனியார் இராணுவ நிறுவனமான வோக்னரும் இந்த நிறுவனத்தின் தலைவரும் எங்கே என்று ஏன் கேட்கிறீர்கள்? இது ரஷ்ய நிறுவனம். எனவே, கேள்வி எனக்கு தெளிவாக இல்லை. எனக்குத் தெரிந்த வரை வோக்னர்கள், சிறந்த போராளிகள், அவர்களின் முகாம்களில் உள்ளனர். களத்திலிருந்து பின்னுக்கு திரும்பிய பின்னர் முகாம்களில் உள்ளனர். அவை ரஷ்யாவில் உள்ளன" என்று அலெக்சாண்டர் லுகாஷென்கோ கூறினார்.

நாட்டில் வோக்னர் போராளிகளை நிலைநிறுத்துவதால் பெலாரஸுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று ஜனாதிபதி கூறினார்.

"யெவ்ஜெனி ப்ரிகோஜினைப் பொறுத்தவரை, அவர் செயின்ட் பீற்றர்ஸ்பேர்க்கில் இருக்கிறார்" என்று ஜனாதிபதி கூறினார். 'இன்று காலை அவர் எங்கே இருந்தார்?' அவர் மொஸ்கோவிற்கோ அல்லது வேறு இடத்திற்கோ சென்றிருக்கலாம். ஆனால் அவர் பெலாரஸில் இல்லை" என்று ஜனாதிபதி கூறினார்.

"வோக்னரைப் பயன்படுத்துவதில் எந்த ஆபத்தும் இல்லை என்று நான் பார்க்கிறேன். எல்லா தரப்பிலிருந்தும் பயமுறுத்தும் போதிலும், இது என்னை தொந்தரவு செய்யக்கூடிய ஒன்றல்ல. இது மிகவும் சக்திவாய்ந்த போர் பிரிவு என்பதை அனைத்து அண்டை நாடுகளும் மற்றும் அமெரிக்காவின் தலைமையும் புரிந்து கொள்கிறது. வோக்னர் குழு பல போர்களை கடந்து, வந்துள்ளது "என்று அலெக்சாண்டர் லுகாஷென்கோ கூறினார். (அ)

# டிஸ்னி நட்சத்திரம் கோக்கோ லீ மரணம்

நியூயோர்க், ஜுலை 07

பிரபல டிஸ்னி நடத்திரமும் 1900 முதல் 2000 களில் ஆசியாவின் பிரபல பாப் நட்சத்திர பாடகருமான கோகோ லீ தனது 48 ஆவது வயதில் காலமானார்.

மன உளைச்சல் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று தற்கொலைக்கு முற்சித்தார்.

இதில் அவர் உயிருக்கு போராடிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதார்.

ஹொங்கொங்கில் பிறந்த கோக்கோ லீ கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவுக்கு குடும்பத்தோடு குடிபெயர்ந்தார்.

அங்கு உயர்நிலைப் படிப்பை முடித்த பின், ஹொங்கொங்கிற்குச் சென்று ஒரு பாடும் போட்டியில் கலந்துகொண்டு முதல் பரிசை பெற்றார்.



இது அவரது இசை வாழ்க்கையைத் தொடங்கியது.

சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு இசை அல்பங்களை வெளியிட்டுள்ளதுடன் ஒஸ்கார் விருதுகளையும் வென்றுள்ளார்.

கோகோ லீயின் மறைவு அவரது இசை ரசிகர்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

# மெக்சிக்கோ பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்து விபத்து

## 27 பேர் உயிரிழப்பு



மெக்சிக்கோ சிற்றி, ஜுலை 07

மெக்சிக்கோ-ஒஹஸ்கா மாகாணத்தில் மலைப்பாதைக்கு மத்தியில் பயணிகள் பயணித்த பேருந்து ஒன்று பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான தில் 27 பேர் உயிரிழந்துள்ளதுடன் 17 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இடம் பெற்ற விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

இதேவேளை, இந்தியாவின் தமிழகத்தில் புதுக்கோட்டை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார் விபத்தில் சம்பவ இடத்திலேயே நால்வர் உயிரிழந்திருப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

மேலும், உலகளவில் வாகன விபத்துக்களினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

வாகனச் சாரதிகளின் அசமந்தப்போக்கே இவ்விபத்துக்கள் நிகழ்வதற்கான மிக முக்கிய காரணம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கடன் வாங்கும் பட்டியலில் நான்காம் இடத்தில் பாக்.

இஸ்லாமாபாத், ஜுலை 07

கடந்த மார்ச் மாத நிலவரப்படி, சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கிய நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தான் நான்காவது இடத்தில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அண்மையில் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில் அங்கு பண வீக்கம், விலையுயர்வு போன்றவற்றால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

அதன்படி, இவற்றை சமாளிப்பதற்காக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றிடம் பாகிஸ்தான் கடன் வாங்கியுள்ளது.

இதேவேளை, சுமார் மூன்று இலட்சம் கோடி கடன் தொகையுடன் ஆர்ஜென்ரீனா இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்திடம் மூன்று பில்லியன் டொலர் கடன் தொகையை பெற்றுக்கொள்வதற்காக ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைன் அடுக்குமாடிக் குடியிருப்பு மீது ரஷ்யாவின் தொடர் ஏவுகணை தாக்குதல்!

கீவ், ஜுலை 07

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான போரின் 498 ஆவது நாளில், மேற்கு உக்ரைனில் உள்ள லிவிவ் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு மீது ரஷ்யா தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

அதன்படி, ரஷ்யா பத்து ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் அதில் ஏழு ஏவுகணை தாக்குதல்கள் முறியடிப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த ஏவுகணைத் தாக்குதலால் குறித்த அடுக்குமாடி குடியிருப்புக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ள நிலையில் 32 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதோடு இதுவரையில் நான்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக உக்ரைனின் உள்நாட்டு விவகார அமைச்சர் இஹோர் க்ளிமென்கோ தெரிவித்துள்ளார்.

குறித்த கட்டட இடிபாடுகளில் சிக்கியிருந்த ஏழு உக்ரைனியர்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் , தொடர்ந்தும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இந்த தாக்குதல் மூலம் 60 வீடுகள் முற்றாக அழிந்துள்ளதுடன் பல்கலைக்கழக விடுதி ஒன்று மற்றும் பாடசாலை ஒன்றும் சேதமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதல் லிவிவ் அடுக்குமாடி குடியிருப்பின் உட்கட்டமைப்பின் மீதான மிக மோசமான தாக்குதல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த தாக்குதல் தொடர்பில் ரஷ்யா இது வரையில் எந்தவிதமான பதிலும் வழங்காத நிலையில் எதிர் தாக்குதல்களை தீவிரப்படுத்தப் படும் என உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார். (அ)

# பூமியின் அச்சு கிழக்கே 80 சென்ரிமீற்றர் சாய்வு!


நியூயோர்க், ஜுலை 07

நிலத்தடி நீரை பிரித்தெடுத்து வேறு இடத்திற்கு நகர்த்துவதால் பூமியின் அச்சு கிழக்கு நோக்கி 80 சென்ரிமீற்றர் சாய்ந்துள்ளதாகவும், இந்த மாற்றம் 1993-2010 இற்கு இடையில் நடந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Geophysical Research Letters** இதழில் வெளியிடப்பட்ட ஒரு புதிய ஆய்வின்படி, நிலத்தடி நீரை பிரித்தெடுப்பதும், பெருங்கடலுக்கு நீர் பெருமளவில் செல்வதும் தான் இதற்கு காரணம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த வளர்ச்சிகள் பெருங்கடல்களைப் போன்ற பெரிய நீர்நிலைகளை இடமாற்றம் செய்கின்றன, இதன் விளைவாக பூமியின் அச்சின் சாய்வு ஏற்படுகிறது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

செவ்வாய் கிரகத்தில் காணப்படும் பாறைகளை ஒத்த பாறைகள் இலங்கையில் கண்டுப்பிடிப்பு அச்சு என்பது ஒரு செங்குத்து கோடு, அது தன்னைச் சுற்றி வரும்போது பூமியின் மையத்தின் வழியாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஓடுவதாக நாம் கற்பனை செய்கிறோம். இதை ஆங்கிலத்தில் Axis என்று சொல்வார்கள்.




நீர்நிலைகள் இடம்பெயர்வதால் கடல் மட்டமும் பாதிக்கப்படுகிறது. பிரித்தெடுக்கப்பட்ட நிலத்தடி நீர் வளிமண்டலத்தில் ஆவியாகிறது அல்லது ஆறுகளில் நுழைகிறது. பின்னர் மழை வடிவில் கடலில் சந்திக்கிறது.

இதன் மூலம் நிலத்தில் இருந்து தண்ணீர் கடலைச் சென்றடைகிறது. இது நீரின் மறுபகிர்வு" என்று தென் கொரியாவில் உள்ள சியோல் தேசிய பல்கலைக்கழகத்தின் புவி அறிவியல் பேராசிரியரான கி-வியோன் சியோ பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

பூமியின் சுழற்சியை மாற்றும் திறன் தண்ணீருக்கு உண்டு என்பது 2016 இல் கண்டுபிடிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டு ஆய்வு துருவ நீர் இழப்பு (உருகும் பனி மற்றும் கடல்களில் நுழையும் நீர்) பூமியின் அச்சின் சாய்வை எவ்வாறு பாதிக்கிறது என்பதை மையமாகக் கொண்டது.

ஆனால், பூமியின் சுழற்சியில் ஏற்படும் மாற்றங்களில் நிலத்தடி நீர் வகிக்கும் பங்கு பற்றி இதுவரை யாரும் திட்டவட்டமான புரிதலுக்கு வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 100ஆவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கினார் ஸ்ரீவ் ஸ்மித்!




லீட்ஸ், ஜூலை 07

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அபார துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஸ்ரீவ் ஸ்மித் நேற்றுத் தனது 100ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடினார்.

சுழல் பந்துவீச்சாளராக அணிக்குள் நுழைந்த ஸ்மித் நவீன கிரிக்கெட்டின் மகத்தான துடுப்பாட் வீரராக அறியப்படுகிறார்.

'எங்கள் தலைமுறையின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர்' என ஸ்மித்தை கடந்த மாதம் இந்திய வீரர் விராட் கோலி புகழந்திருந்தார். கடந்த வாரம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 9,000 ஓட்டங்களை கடந்து அசத்தினார். நடப்பு ஆஷஷ் தொடரில் நேற்று ஆரம்பமான போட்டி 100ஆவது போட்டியாக அமைந்தது.

34 வயதான ஸ்மித், கடந்த 2010இல் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமானார். இதுவரை மொத்தம் 99 போட்டிகளில் விளையாடி உள்ள அவர் 9 ஆயிரத்து 113 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில், 32 சதங்கள் மற்றும் 37 அரை சதங்கள் அடங்கும். அதிகபட்சமாக ஒரே இன்னிங்ஸில் 239 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அவரின் துடுப்பாட்ட சராசரி 59.56. ஆஸி. அணிக்காக டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த துடுப்பாட்ட வீரர்களில் இப்போதைக்கு 4ஆவது இடத்தில் உள்ளார். 160 பிடிகளையும் எடுத்துள்ளார். 19 விக்கெட்களை கைப்பற்றி உள்ளார்.

ஸ்மித், தனது தொடக்க கால டெஸ்ட் கிரிக்கெட் வாழிவில் சுழல் பந்துவீச்சு திறனுக்காக தான் அணியில் தேர்வு செய்யப்பட்டார். உள்ளூர் கிரிக்கெட்டில் அவர் விளையாடிய போது ஷேன் வோர்ன் அவருக்கு லெக் ஸ்பின் வீசும் நுணுக்கங்களை போதித்துள்ளார். முதல் தர கிரிக்கெட்டில் அவரின் துடுப்பாட்ட சராசரி 50. இருபது -20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் அறிமுகத்தை அடுத்து 2010இல் டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமானார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான தனது அறிமுக டெஸ்ட் போட்டியில் 2-வது இன்னிங்ஸில் பந்து வீசும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. அதில் 3 விக்கெட்களை கைப்பற்றினார். 5 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 2 அரைச்சதம் மற்றும் 3 விக்கெட்களை மட்டுமே கைப்பற்றி இருந்தார். 9ஆவது துடுப்பாட்ட வீரராகக் களம் கண்டு விளையாடி உள்ளார். தற்போது 3ஆவது துடுப்பாட்ட வீரராக ஆஸி. அணியின் துடுப்பாட்ட வரிசையில் விளையாடி வருகிறார். தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வில் 3 முதல் 9ஆவது இடம்வரை துடுப்பாட்ட வீரராக களம் புகுந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## கண்ணீருடன் ஓய்வை அறிவித்தார் இக்பால்!

டாக்கா, ஜூலை 07

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக பங்களாதேஷ் அணி வீரர் தமிம் இக்பால் அறிவித்துள்ளார்.

ஓய்வு குறித்து செய்தியாளர்களிடம் பேசிக்கொண்டிருந்த போதே கண்ணீர் விட்டு அழுதார். இந்த புகைப் படம் தற்போது சமூக வலைதளங்களில் பிரபலமாகி வருகிறது.

பெப்ரவரி 2007இல் தமிம் தனது ஒருநாள் போட்டியில் அறிமுகமானார். மேலும் பங்களாதேஷ் அணிக்காக அதிக ஒருநாள் ஓட்டங்கள் (8313) மற்றும் சதங்கள் (14) அடித்துள்ளார். விராட் கோலி மற்றும் ரோகித் ஷர்மாவுக்கு அடுத்தபடியாக, ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்த மூன்றாவது வீரர் இக்பால் ஆவார். (ஐ)



## விம்பிள்டன் ரென்னிஸ் மெத்வதேவ் முன்னேற்றம்

லண்டன், ஜூலை 07

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் உலகின் 3ஆம் நிலை வீரரான ரஷியாவின் டேனியல் மெத்வதேவ் 2ஆவது சுற்றுக்கு வந்துள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 7-4, 6-4, 6-3 என பிரிட்டனின் ஆர்தர்' பெரியை வீழ்த்தினார்.

போட்டித்தரவரிசையில் 12-ஆவது இடத்திலிருக்கும் பிரிட்டனின் கமரூன் நோரி 6-3, 4-6, 6-1, 6-4 என்ற செற்களில் செக் குடியரசின் தாமஸ் மசாக்கை வீழ்த்தி 2-ஆவது சுற்றுக்கு வந்தார்.

பிரிட்டனின் அண்டி முர்ரே 6-3, 6-0, 6-1 என சக நாட்டவரான ரயான் பெனிஸ்டனை சாய்த்தார். 27 ஆவது இடத்திலிருக்கும் மற்றொரு பிரிட்டன் வீரரான டேன் இவான்ஸ் 2-6, 3-6, 7-6 (7-5), 4-6 என்ற செட்களில் பிரான்ஸின் கென்டின் ஹாலிஸிடம் தோல்வி கண்டார்.

## விம்பிள்டன் ரென்னிஸ் கசாகிட்னா 3ஆம் சுற்றில்

லண்டன், ஜூலை 07

கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியான விம்பிள்டனில் ரஷ்ய வீராங்கனை டரியா கசாட்கினா 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில், போட்டித் தரவரிசையில் 11ஆவது இடத்திலிருக்கும் கசாட்கினா 6-0, 6-2 என்ற செற்களில் பிரிட்டனின் ஜோடீ புராஜை எளிதாகத் தோற்கடித்தார். 20ஆவது இடத்திலிருக்கும் குரோஷியாவின் டோனா வெகிச் 6-2, 6-3 என சீனாவின் ஷாங் ஸூவாயை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதர முதல் சுற்று போட்டிகளில் அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்ரீபன்ஸ் 6-2, 6-3 என சுவீடனின் ரெபெக்கா பீற்றர்சனையும், எஸ்டோனியாவின் ஆனெட் கொன்டவிட் 6-4, 6-4 என இத்தாலியின் லுக்ரெசியா ஸ்ரெபானினியையும் வெளியேற்றினர். போட்டித் தரவரிசையில் 2ஆம் இடத்திலிருக்கும் பெலாரஸின் அரினா சபலென்கா 6-3, 6-1 என ஹங்கேரியின் பன்னா அட்வார்டியை தோற்கடித்தார்.



மேற்கிந்தியவுடனான தொடர்

## பாண்ட்யா தலைமையில் இந்திய அணி அறிவிப்பு




மும்பை, ஜூலை 07

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்த பயணத்தில் 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 5 இருபது -20 கிரிக்கெட் தொடர்களில் இரு அணிகளும் விளையாடவுள்ளன.

இதில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. தற்போது ஹார்திக் பாண்ட்யா தலைமையிலான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 3 முதல் 13ஆம் திகதி வரையில் இந்தத் தொடர் நடைபெறவுள்ளது.

இந்திய அணி விவரம் -

இஷான் கிஷன் (விக்கெட் காப்பாளர்), ஷுப்மன் கில், யஷஸ்வி ஜெய்ஸ்வால், திலக் வர்மா, சூர்யகுமார் யாதவ் (உப அணித் தலைவர்), சஞ்சு சாம்சன் (விக்கெட் கீப்பர்), ஹார்திக் பாண்ட்யா (அணித் தலைவர்), அக்சர் படேல், சஹல், குல்தீப் யாதவ், ரவி பிஷ்னோய், அர்ஷ் தீப் சிங், உம்ரான் மாலிக், அவேஷ் கான், முகேஷ் குமார்.

# உலகக் கிண்ணத் தகுதி சுற்று மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி!



ஹராரே, ஜூலை 07

ஐ. சி. சி. உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான தகுதிச் சுற்று போட்டியில் ஓமனை 7 விக்கெட்கள் வித்தியாசத் தில் வீழ்த்தியது மேற்கு இந்தியத் தீவுகள் அணி.

சிம்பாப்வேயின் ஹராரேவில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுப்பர் 6 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் - ஓமன் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓமன் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 221 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக சுராஜ் குமார் 53, சொயிப் கான் 50, காஷ்யப் பிரஜாபதி 31, அயன் கான் 30 ஓட்டங்கள் சேர்த்தனர்.

மேற்கு இந்தியத் தீவுகள் தரப்பில் ரொமரியோ ஷெப்பர்ட் 3, கைல் மேயர்ஸ் 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

222 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 39.4 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 222 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

பிரண்டன் கிங் 104 பந்துகளில், 15 பௌண்ட்ரிகளுடன் 100 ஓட்டங்கள் விளாசினார். அணித் தலைவர் ஷாய் ஹோப் 64 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 63 ஓட்டங்கள் சேர்த்தார். உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறும் வாய்ப்பை ஏற்கெனவே மேற்கிந்தியத் தீவுகள் இழந்து விட்டது. எனினும், அந்த அணிக்கு இது ஆறுதல் வெற்றியாக அமைந்தது.

# இராணுவம் வெளியேறிய காணியை மக்களிடம் ஒப்படைப்பதற்குப் பேச்சு!

## யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 07

**வலிகாமம் வடக்கில் காங்கேசன்துறை மேற்கில் இராணுவ முகாம் அகற்றப்பட்டமையால் 30 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. அந்தக் காணியை மக்களிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைப்பதற்குரிய பேச்சுக்கள் இராணுவத்தினருடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**

காங்கேசன்துறை சிமெந்து ஆலையுடன் இணைந்தாக இராணுவத்தினரின் ஆயுதக் கிடங்கு அமைந்திருந்தது. அதற்குப் பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் காங்கேசன்துறை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 30 ஏக்கர் காணியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த முகாமிலிருந்து கடந்த மாதம் 10ஆம் திகதி இராணுவத்தினர் வெளியேறினர்.

இந்தக் காணிகள் உரிமையாளர்களிடம் எப்போது ஒப்படைக்கப்படும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர் பதிலளிக்கும் போது, "அந்தக் காணிகளை மக்களிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைப்பதற்குரிய பேச்சுக்கள் இராணுவத்தினருடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது"-என்றார்.

இதேவேளை, 2013ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கில் 6 ஆயிரத்து 384 ஏக்கர் நிலப்பரப்பை சுவீகரிப்பதாக அப்போதைய மஹிந்த ராஜபக்ச அரசு அறிவித்திருந்தது. பின்னர் நல்லாட்சி காலத்தில் அவற்றில் கணிசமான காணிகள் விடுவிக்கப்பட்டன. இருப்பினும் காணிகள் விடுவிக்கப்பட்டமைக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கவில்லை. அதனை வெளியிடும் நோக்குடன் விடுவிக்கப்பட்ட காணிகளை அளக்கும் நடவடிக்கை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பு வெளியிட்டிருந்தது. 2013ஆம் ஆண்டு மஹிந்த அரசால் வெளியிடப்பட்ட காணி சுவீகரிப்பு வர்த்தமானி முழுமையாக மீளப்பெறப்பட வேண்டும் என்று அந்தக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் வலியுறுத்தியிருந்தார்.

இந்தநிலையில் அளவீட்டு நடவடிக்கையின் முன்னேற்றம் தொடர்பில் பதிலளித்த யாழ். மாவட்ட அரச அதிபர், "முன்னாயத்தப் பணிகள் மாத்திரம் நடக்கின்றன. கள அளவீட்டுப் பணிகள் இன்னமும் ஆரம்பமாகவில்லை. வெகுவிரைவில் ஆரம்பமாகும்." - என்றார். (அ)

# கண் சத்திர சிகிச்சைக்கு உள்ளான பெண் மரணம்!

## விசாரணை நடத்தக் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 07

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சைக்கு உள்ளான பெண்ணொருவர் உயிரிழந்தமை தொடர்பில் உடனடி விசாரணை நடத்தப்படவேண்டுமென சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில்-

பெண்ணுக்கு கொடுக்கப்பட்ட மயக்க மருந்தில் ஏற்பட்ட சிக்கலால் இந்த மரணம் நிகழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

தேசிய கண் வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பெண் ஒருவர் சத்திர சிகிச்சையின் பின்னர் சுயநினைவின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தாயார் எனவும், மரணம் சந்தேகத்திற்குரியது எனவும் சுகாதார நிபுணர்களின் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் கூறினார். (அ)

# புதிய வகை போதைப்பொருள் முதன்முறையாக கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 07

இலங்கையில் கண்டுபிடிக்கப்படாத கொக்கெய்ன் போன்ற புதிய வகை போதைப்பொருள் மொரட்டுவ சமன்புர பிரதேசத்தில் உள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இருந்து நேற்று புதன்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பாணந்துறை மத்திய ஊழல் ஒழிப்பு செயலணி தெரிவித்துள்ளது.

இலங்கையில் இந்த போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்படுவது இதுவே முதல் முறை என்றும், இலங்கையில் இந்த போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இரண்டு கோடீஸ்வர வர்த்தகர்களும் அவர்களுக்கு ஆதரவாக இருந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இனந்தெரியாத போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் வலான ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், மொரட்டுவ சமன்புர பிரதேசத்தில் உள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் மூன்று மாடி வீடொன்றை நேற்று புதன் கிழமை காலை சுற்றிவளைத்த விசேட பொலிஸ் குழு, கோடீஸ்வர வர்த்தகரின் 29 வயதுடைய மகனைக் கைது செய்துள்ளது. அவர் போதைப்பொருளை பயன்படுத்திக் கொண்டிருந்தார் என மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அப்போது சந்தேகநபரிடம் மேற்படி போதைப்பொருள் 115 கிராம் இருந்தது. சந்தேக நபர் மிகவும் கவனமாக பொம்மைகளை பொதி செய்து கொண்டிருந்ததாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

சந்தேகநபர் வெளிப்படுத்திய தகவலின் பிரகாரம், இந்த போதைப்பொருளை இலங்கைக்கு கொண்டு வரும் மற்றுமொரு கோடீஸ்வர வர்த்தகர் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளதுடன், அத்திட்டிய பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அத்திட்டிய பகுதியைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகர் 30 வயதுடையவர் எனவும் அவர் படகு மற்றும் படகு இயந்திர வியாபாரம் செய்து வருவதாகவும் இலங்கை மற்றும் மாலைதீவில் பல வர்த்தக நிறுவனங்களை வைத்திருப்பவர் எனவும் பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாளொன்றுக்கு 189 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 07

நாட்டில் நாளொன்றுக்கு 189 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்படுவதுடன் நடப்பாண்டில் ஜனவரி முதல் ஜூலை 5ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 50 ஆயிரத்து 264 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் தற்போது மழையுடன் கூடிய சீரற்ற கால நிலை நிலவி வருகின்ற நிலையில், பொதுமக்கள் டெங்கு நுளம்பு பெருகும் அபாயமுள்ள இடங்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என்று டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள 43 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்த வகையில், கடந்த ஜனவரி முதல் ஜூலை 05ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நாடு முழுவதும் 50ஆயிரத்து 264 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# கஞ்சா செய்கை திட்டம் அடுத்த மாதம் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 07

கஞ்சா பயிர்ச்செய்கைத்திட்டம் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்டுநாயக்கவிலுள்ள முதலீட்டுச் சபை வலயத்துள் மேற்படி கஞ்சா வளர்ப்புச் செயற்றிட்டம் அடுத்த மாதம் முதல் முன்னெடுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 11 முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர்.

இந்த செயற்றிட்டத்தால் இன்னும் இரண்டு, மூன்று வருடங்களில் 4 முதல் 5 பில்லியன் ரூபா வருமானம் ஈட்ட முடியும்.

மேலும் இச்செயற்றிட்டத்துக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ள அதேவேளை, இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு சுமார் 11 முதலீட்டாளர்கள் ஆர்வமாக உள்ளனர்.

கஞ்சா பயிர்ச்செய்கைக்கும் அதன் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கும் அவர்களே பொறுப்பாவார்கள்.

இவ் உற்பத்திகள் நாட்டின் வருமானத்துக்கு பங்களிக்கும். கடந்த கால முயற்சியை தோற்கடித்தது போன்று இந்த செயற்றிட்டத்தை தோற்கடிக்க முடியாது. அதற்கு அனுமதிக்க மாட்டேன்-என்றார். (அ)

# இலங்கை துறைமுக அபிவிருத்திக்கு பெல்ஜியத்திடமிருந்து உதவி கிட்டும்

கொழும்பு, ஜூலை 07

இலங்கையின் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான ஐரோப்பிய நவீன தொழில்நுட்பங்களை வழங்குவதற்கு பெல்ஜிய தூதுவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இந்த விடயம் தொடர்பில் இணக்கம் வெளியிடப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலை மற்றும் காலி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குமாறும் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பெல்ஜிய முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு வழங்க முடியும் எனவும் அமைச்சர் கூறினார்.

அதற்கமைய, செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஐரோப்பிய நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும் எனவும் குறித்த தொழில்நுட்பங்களை கொழும்பு துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த தேவையான ஒத்துழைப்பை வழங்க விரும்புவதாகவும் பெல்ஜிய தூதுவர் தெரிவித்தார்.

தென் மாகாணத்தில் பெல்ஜிய முதலீட்டாளர்களால் நடத்தப்படும் படகுத்துறையில் இலங்கை இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளுக்கான பயிற்சிகளை வழங்குவது குறித்தும் இதன்போது இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மீன்பிடியில் ஏற்பட்ட வீழ்ச்சியால் கோழி இறைச்சி விலை எகிறியது

கொழும்பு, ஜூலை 07

சீரற்ற காலநிலையால் மீன்பிடியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே தற்போது கோழி இறைச்சியின் விலை உயர்வதற்கு காரணம் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நிலவும் சீரற்ற காலநிலையால் ஒரு கிலோ மீனின் விலையானது 3000 ரூபாவாக உயர்ந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத்தின் கேள்விக்கு பதிலளித்த அவர், மீன்பிடி குறைவடைந்ததன் விளைவாக அதிக தேவை காரணமாக கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதிக தேவைக்கு ஏற்ப கோழி இறைச்சி உற்பத்தி அதிகரிக்கவில்லை.கோழியின் விலையை அதிக அளவில் உயர்த்துவது நியாயமற்றது.விரைவில் கோழி இறைச்சி விலையை குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

முட்டை உற்பத்தி இயல்பு நிலைக்குத் திரும்புவதால் மூன்று மாதங்களுக்குள் முட்டை தட்டுப்பாடும் தீர்க்கப்படும்-என்றார். (அ)

## நீதிமன்றத்தின்...

எழுதும் திறன் 14 சதவீதம் குறைந்துள்ளது என்றும் நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அவர் கூறினார்.

நீதிமன்றங்களில் நீதி விசாரணைகள் தாமதம் மற்றும் அது தொடர்பான காரணங்கள் தொடர்பிலான ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு அதிபர்கள் பற்றாக்குறை இருந்தாலும் நீதிமன்ற நடைமுறைகளுக்கு கட்டுப்பட வேண்டியுள்ளது. இந்த நிலையில் மாணவர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன. இந்த வழக்குகள் விரைவாக தீர்க்கப்பட வேண்டும். தற்போதுள்ள சூழ்நிலையில் மாணவர்களின் உரிமைகள் மீறப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கோவிட் தொற்றுநோயால் சுமார் 4 இலட்சம் மாணவர்கள் கல்வியை இழந்துள்ளனர். மூன்று மாதங்களுக்கு முன்னர் யுனிசெவ் நடத்திய ஆய்வின் முடிவுகளின்படி மூன்றாம் வகுப்பு மாணவர்களின் வாசிக்கும் மற்றும் எழுதும் திறன் 14 சதவீதம் குறைந்துள்ளது. தொடக்கப் பிரிவில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாததே இதற்கு முக்கிய காரணம்.

கோவிட் தொற்றுநோய் காரணமாக பாடசாலைகள் மூடப்படுவது மற்றொரு காரணம். இன்று 9 ஆயிரம் பாடசாலை அதிபர்கள் மட்டுமே உள்ளனர். கடந்த டிசெம்பரில் பெரும்பாலான அதிபர்கள் ஓய்வு பெற்றனர். ஆனால் இதுவரை 4 ஆயிரத்து 500 அதிபர் வெற்றிடங்களை நிரப்ப முடிந்துள்ளது - என்றார். (ஐ)

## கட்டணமானி...

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் தலைமையில் முச்சகர வண்டிகளுக்கு கட்டணமானி பொருத்துவது தொடர்பான கலந்துரையாடல் இன்று (நேற்று) நடந்தது. இதில் இறுக்கமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதன்படி, எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் கட்டண மானி பொருத்தப்பட வேண்டும். கட்டணமானி பொருத்தப் பட்ட ஓட்டோக்களுக்கு 20,21,22 ஆகிய திகதிகளில் பொலிஸாரால் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படும்.

ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட பின்னர் செப்ரெம்பர் மாதத்தில் தரிப்பிடங்களில் முச்சக்கரவண்டிகள் செலுத்த சந்தர்ப்பம் வழங்கப்படும். கட்டண மானி பொருத்தப்படாத, ஸ்ரிக்கர் ஒட்டப்படாத முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பில் நாளை (இன்று) முதல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (ஐ)

## சபாநாயகருக்கு...

பக்கசார்பான செயல்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அவர்கள் அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்பட்ட உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பிலான பிரேரணையை நிறைவேற்றும் போது, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துகளை வெளியிடுவதற்கான வாய்ப்புகளை சபாநாயகர் தடுத்தார் என்றும் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் இரவு 9.30 வரை விவாதத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் இரவு 7.30 அளவில் வாக்கெடுப்பை நடத்துவதற்கு சபாநாயகர் மேற்கொண்ட தீர்மானத்தால் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டது. தற்போதைய சபாநாயகர் இதற்கு முன்னரும் பாராளுமன்றத்தில் இவ்வாறு செயல்பட்டுள்ளார் என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## உத்தேச...

உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள முதலாவது திருத்த யோசனையில் சட்டவரைவின் 28 பக்கங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும் இதே போல் இரண்டாவது திருத்த யோசனையிலும் பல விடயங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

ஆகவே, எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வின் போது துறைசார் மேற்பார்வை குழுவின் யோசனைகளு டன் குழுநிலைவேளை திருத்தத்துடன் சட்டமூலத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது - என்றும் தெரிவித்தார். (ஐ)

## மனித...

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்த அகழ்வுப் பணிகள் முறைப்படி செய்யப்படுவதாகத் தெரியவில்லை. சர்வதேச ரீதியிலே இந்த அகழ்வுப் பணிகளை எப்படி செய்ய வேண்டும் என்பதற்கு பல நியதிகள் உண்டு. அந்த நியதிகள் எவையும் இங்கு பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. இந்த அகழ்வுப் பணிகள் எதேச்சதிகாரமாகச் செய்யப்படுகின்றன.

மருத்துவர் இங்கே இருந்தாலும்கூட, சாதாரணமாக ஒரு புதைகுழியிலே ஒரு மனித உடலைத் தோண்டி எடுத்து செய்யப்படுகின்ற பரிசோதனைக்கும் இப்படி பல உடல்கள் இருக்கின்ற பகுதியை தோண்டி எடுப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. இதைச் செய்வதற்கான சர்வதேச நியதிகள் ஏராளமாக இருக்கின்றன. அந்த நியதிகளைப் பின்பற்றியே இந்த அகழ்வுப்பணிளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் இங்கே அப்படியாக அகழ்வுப் பணிகள் இடம் பெறுவதாகத் தெரியவில்லை.

இந்த நாட்டில் பல ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் ஆக்கப்பட்ட சூழ் நிலையிலே, இவ்வாறான சாட்சியங்கள் கிடைக்கிறபோது, அவை மிகவும் கவனமாக சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையிலே விசாரிக்கப்பட்டு, அகழ்வுகள் செய்யப்பட வேண்டும். ஆனால் இப்படியாக எதேச்சதிகாரமாக செய்வதும், அகழ்வுப்பணிகள் நடைபெறுகின்ற இடங்களில் அகழ்வுப்பணிகளில் ஈடுபடுபவர்கள், மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் இடமாற்றம் செய் யப்படுகின்றனர். சிலவேளைகளில் நீதி வான்கள்கூட இடமாற்றம் செய்யப்படுகின்றார்கள்.

ஆகையால், இதிலிருந்து உண்மையைக் கண்டறிவதற்கு அரசுக்கு முழுமையான மனம் இல்லாமல் இருப்பதும், இன்னொருபடி மேலே சொன்னால் இவற்றை எல்லாம் மூடி மறைப்பதும் தான் அரசுடைய நோக்கமாக இருப்பது புலனாகிறது. குறிப்பாக, இந்த இடத்திலிருந்து எடுக்கப்படுகின்ற சான்றுப் பொருட் கள்கூட கவனமாகப் பேணிப் பாதுகாக் கப்படவில்லை. அதனை இங்கே நேரடியாக எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

எடுக்கப்பட்ட சான்றுப்பொருட்கள் பாதுகாப்பின்றி, பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை எவரும் எடுத்துக்கொண்டு போகக்கூடிய வகையிலேயே குறித்த சான்றுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருப்பதை அதானிக்கக்கூடியதாகவிருந்தது.

இதேவேளை இந்த இடத்தை எவ்வாறாகப் பாதுகாப்பாக வைத்திருக்கப் போகின்றார்கள் என்பதிலும் கேள்விகள் இருக்கின்றன.

பொலிஸாரின் கைகளில் இந்த இடத்தை விடப்போகின்றார்களா? இது வேலியே பயிரை மேய்கின்ற கதையாக அமைந்துவிடக்கூடாது. புலனாய்வாளர்கள் ஏராளமாக இங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர். பல புலனாய்வாளர்கள் இங்கே படங்கள் எடுப்பதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இந்த அகழ்வு பணியில் ஈடுபட சர்வதேச நிபுணத்துவம், மேற்பார்வை உடனடியாக வேண்டும் - என்றார். (ஐ)

## முல்லைத்தீவு...

கொக்குத்தொடுவாயில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தேவைக்காக கடந்த 29ஆம் திகதி நிலத்தைத் தோண்டியபோது மனித உடல் எச்சம் மீட்கப்பட்டது. இது பெண் போராளி ஒருவரினுடையதாக இருக்கலாம் என்று கூறப்பட்டது.

அங்கு மேலும் மனித உடல் எச்சங்கள் காணப்பட்ட நிலையில், நேற்றைய தினம் அந்த இடம் முல்லைத்தீவு நீதிவானின் முன்னிலையில் அகழப்பட்டது. இதன்போது 13 பேரின் உடல் எச்சங்கள் மீட்கப்பட்டன. இவற்றில், பெண்கள், ஆள்கள் என்பவற்றின் உடல் எச்சங்களும் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்தில், பிளாஸ்ரிக் பொருட்கள், வயர் உள்ளிட்டவை மீட்கப்பட்டன.

நேற்று மாலையுடன் அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

எதிர்வரும் வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் அனைத்து திணைக்களங்கள் மற்றும் சட்டத்தரணிகளுடன் நடைபெறவுள்ள கலந்துரையாடலின் பின்னரே மனிதப் புதைகுழியை தொடர்ந்து அகழ்வது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்றும் தெரியவருகின்றது. (ஐ)

## சர்வதேச...

பணிப்பாளர் நாயகம் மரியா லூயிஸ் ஹனானிடம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம். பி., தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி., ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் த. சித்தார்த்தன் எம். பி. ஆகியோர் வலியுறுத்தினர்.

அத்துடன், நாட்டை வெளியேறிய தமிழர்களில் பெருந்தொகையினருக்கு அடைக்கலம் கொடுத்துள்ள நாடு என்ற வகையில் கனடாவுக்கு இதற்கு உரிமை உள்ளது என்றும் அவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

மேலும், 13ஆம் திருத்தம் தேசிய இனப்பிரச்னைக்கு முழுமையான தீர்வு அல்ல. இது எமக்கு தெரியும். ஆனால், புதிய சட்டங்களை உருவாக்க முன்னர், அரசமைப்பு சட்டத்தில் இன்றிருக்கும் 13ஆம் திருத்த அதிகார பகிர்வு சட்டத்தையும் 16ஆம் திருத்த மொழியுரிமை சட்டதையும் நடைமுறைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காட்டட்டும். இதை சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும். இன்று நாம் இலங்கை அரசுடன் பேசி சலித்து போய் விட்டோம். இதேபோல் சர்வதேச சமூகத்திடமும் மீண்டும் இவற்றையே பேசி சலித்து போய்க் கொண்டிருக்கிறோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறையவே பேசுகிறார். குறைவாகவே செய்கிறார். இந்த நாட்டை சிங்கள - பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடு என நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இத்தகையை கொள்கையை முன்னெடுக்கும் எந்தவொரு கொழும்பு அரசாங்கத்தையும் நாம் எதிர்த்து போராடுவோம். எமது அபிலாசைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதை போன்று, சர்வதேச சமூகத்திடம் எடுத்துக் கூறுவதிலும் சலிப்படைந்து வருகிறோம் - என்றும் தமிழ் பிரதிநிதிகள் கனடா இராஜதந்திரிகளிடம் கூறினர்.

தமிழ்த் தலைவர்களின் கருத்துகளை செவிமடுத்த கனடா இராஜதந்திரிகள், நீங்கள் கூறியதை நாங்கள் புரிந்து கொள்கிறோம். அது எமக்கு ஒரு செய்தி என்றும் கூறினர்.

கனடா இல்லத்தில் நேற்று நிகழ்ந்த இந்த சந்திப்பில் இலங்கைக்கான கனடிய தூதுவர் எரிக் வெல்ஷ், இலங்கை தமிழரசு கட்சியின் பிரதிநிதி சின்னையா இரத்தினவடிவேல், கனடிய தூதரக அரசியல் அதிகாரி கோபிநாத் பொன்னுத்துரை ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# முல்லை அரச அதிபராக உமாமகேஸ்வரன் நியமனம்!

கொழும்பு, ஜூலை 07

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக வடக்கு கல்வி அமைச்சின் செயலாளராக பணியாற்றி வந்த அ. உமாமகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது கடமை பொறுப்புகளை இன்று வெள்ளிக்கிழமை ஏற்றுக்கொள்வார். அவரின் நியமனத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை கல்வி அமைச்சின் செயலாளராக வடக்கு உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## புலிகளின்...

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் மோதல் நடந்தபோது பல தமிழ் மக்கள் தமிழீழ வைப்பகத்தில் நிறைய தங்கத்தை அடகு வைத்திருந்தார்கள். நிறைய பணத்தை வைப்பு செய்திருந்தார்கள். அங்கு வைப்பிலிடப்பட்டிருந்த பணத்தை அடையாளம் காண முடியவில்லையென வைத்தாலும் அங்கு வைப்பிலிடப்பட்டிருந்த தங்கத்தை தானே எடுத்து அரசாங்கத்திடம் ஒப்படைத்ததாக அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இந்த சபையிலும் கூறியிருக்கிறார்.

இந்த நகைகளுக்கு என்ன நடந்தது? தமிழீழ வைப்பகத்தில் நகைகளை அடகு வைத்தவர்கள் அதற்கான ஆதாரமாக அடகு சீட்டுக்களை வைத்துள்ளனர். ஆனால், அவர்களுடைய நகைகளும் பணமும் அப்போதைய மகிந்த குடும்பத்தினதும்- குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷவின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக சரத் பொன்சேகா வெளிப்படையாகவே சொல்லியிருந்தார். ஆனால், இன்று வரை அந்த மக்கள் தங்கமும், நகையும் கிடைக்காமல், அவை கிடைக்குமென காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? இந்த ஊழலுக்கு என்ன விசாரணை? யார் விசாரிக்கப் போகிறீர்கள்? - விசாரணை நடக்காது.

மத்திய வங்கியில் பிணைமுறி ஊழல் இந்த நாட்டின் மிகப்பெரிய ஊழல். உலகின் எந்த நாட்டிலும் நடக்காத அளவில் மிகப்பெரியளவில் கொள்ளையடிக்கப்பட்டது. ஆனால் இன்று கொள்ளையடித்தவர்கள் எல்லோரும் பெரும் பெரும் பதவிகளில் உள்ளனர். இந்த நாட்டில் அவர்கள் ஓடி உலாவித் திரிகிறார்கள். பலர் வெளிநாடுகளில் ஒளிந்துள்ளனர். இந்த நாடு இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுத்ததா? யாரை யாவது கைது செய்ததா? ஏற்கெனவே தங்க நகை விடயத்தில் யாரையாவது கைது செய்ததா? யாரும் கைது செய்யப்படவில்லை. அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் சொத்துகளுக்கு என்ன நடந்தது? தமிழீழ வைப்பகத்தின் சொத்துகளுக்கு என்ன நடந்தது? நீங்கள் கோடி கோடியாக கொள்ளையடித்த புலிகளின் சொத்துகளுக்கு என்ன நடந்தது? குமரன் பத்ம நாதனை கைது செய்து அவரிடமிருந்து பறித்த பணத்துக்கு என்ன நடந்தது? இதை விசாரியுங்கள் - இதை விசாரித்தால் இந்த நாட்டின் ஊழல் இல்லாமல் போகும்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் உகண்டாவிலும் இன்னும் பல நாடுகளிலும் பல முதலீடுகளை செய்துள்ளனர். அவர்களின் பணம் அந்த நாடுகளில் எப்படி முதலீடு செய்யப்பட்டது? எப்படி, எவ்வளவு தங்கம், பணம் முதலீடு செய்யப்பட்டது என்பதை உங்களால் உறுதிப்படுத்த முடியுமா? முடியாது. பிறகு ஊழலுக்கு ஒரு சட்டம். விவாதம். பிறகு அதை நிறைவேற்றுவது. இப்படியெல்லாம் செய்து காலத்தை இழுத்தடித்து கண்துடைப்பு நடவடிக்கையாகவே இந்த சபை நடவடிக்கைகள் சென்றுகொண்டிருக்கிறது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மகனை இலங்கைக்கு நாடு கடத்தவேண்டாம்

## ஆஸி. பிரதமரிடம் தமிழ்த் தாய் கோரிக்கை

கான்பரா, ஜூலை 07

**தனது மகன் இலங்கைக்கு நாடு கடத்தப்படு வதைத் தடுக்க தலையிடுமாறு அவுஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பனீஸிடம் தமிழ்த் தாய் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ரீற்றா அருள்ரூபன் 2012 ஆம் ஆண்டு படகு மூலம் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு சென்று தற்காலிக பாதுகாப்பு விஸா பெற்றிருந்த நிலையில், ஒரு தசாப்த காலத்துக்கு பின்னர் நிரந்தர வதிவிட உரிமை பெற்றார்.

அவர் தனது மகன் டிக்ஸ்ரன் அருள்ரூபனை சட்ட பூர்வமாக அவுஸ்திரேலியா அழைத்து வர முயற்சி செய்தபோதிலும், குடிவரவுத்துறை அவரது விண்ணப் பத்தை 2016 ஆம் ஆண்டு மறுத்திருந்தது.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் விமானம் மூலம் அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோர முடிந்தது. ஆனால் அன்றிலிருந்து மெல்போர்னில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், டிக்ஸ்ரன் அருள்ரூபனை நாடு கடத்த வுள்ளதாக கடந்த மாதம் அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது அதற்கான நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்ச் சிறுபான்மைக் குழுவின் உறுப்பினராக இருப்பதால், அவர் இலங்கையில் சித்திரவதை செய்யப் படலாம் அல்லது கொல்லப்படலாம் என்று அவரது தாயார் அச்சம் வெளியிட்டுள்ளார்.

"தயவு செய்து என்னுடன் என் மகனை மீண்டும் இணைக்க வேண்டும் எனவும், அவர் மட்டுமே என்னிடம் எஞ்சியிருக்கும் ஒரே குடும்ப உறுப்பினர்" என்றும் ரீற்றா அருள்ரூபன் மொழிபெயர்ப்பாளர் மூலம் பிரத மரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

"பிரதமர் ஒரு தாயால் வளர்க்கப்பட்டவர் - ஒரு தாய்க்கும் மகனுக்கும் இடையிலான பிணைப்பை அவர் புரிந்துகொள்வார் என்று நம்புகிறேன்.தயவுசெய்து எனக்கும் மற்ற அகதிகளுக்கும் உதவுங்கள்," என்று அவர் கோரியுள்ளார்.




"அனைத்து மக்களுக்கும் (அகதிகள்) நிரந்தர குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்று நான் விரும்பு கிறேன்." என்றும் அவர் குறிப்பிட்டார்.

2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரின்போது ரீற்றாவின் பகணவர் படுகொலை செய்யப்பட்டார். ரீற்றா 2012 இல் இராணுவ முகாமில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது 26 வயது மகனின் அவுஸ்திரேலிய பாது காப்பு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதுடன் மேல் முறையீடு செய்வதற்கான அனைத்து வழிகளும் மூடப்பட்டுள்ளன.

ரீற்றா அருள்ரூபன், பிரதமருக்கு விடுத்துள்ள வேண்டுகோள் அவரது கடைசி உண்மையான நம்பிக்கையாகும்.

"நான் பல அதிர்ச்சிகளுக்கு ஆளானேன், பாலியல் வன்கொடுமைக்கு ஆளானேன், நான் தப்பித்து அவுஸ்திரேலியா வந்தேன்," என்று அவர் கூறினார்.

"நான் என் மகனுடன் மீண்டும் இணைவதாக நம்பினேன், எனினும், அவரையும் என்னிடமிருந்து பறிக்க முயற்சிக்கிறார்கள்." என்று ரீற்றா அருள்ரூபன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அருள்ரூபனுக்காகச் செயல்படும் சட்டத்தரணி நினா மெர்லினோ, திணைக்களத்தின் நாடு கடத்தும் அறிவிப்பிற்கு எதிராகத் தடையாணை தாக்கல் செய்வதை உறுதிப்படுத்தினார். (அ)

# புதன்கிழமைகளில் மக்களுக்காக நான்!

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 07

வாரந்தோறும் புதன்கிழமைகளில் பொதுமக்கள் தன்னை சந்திக்க முடியும் என்றும், அதற்கு எவ் விதமான முற்கூட்டிய நேர ஒதுக்குகைகளும் மேற்கொள்ளத் தேவையில்லை என்றும் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வாராந்தம் புதன்கிழமைகள் மக்கள் சந்திப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் பொதுமக்கள் தன்னை சந்தித்து அவர்களின் பிரச்னைகள் தொடர்பாக நேரடியாக கலந்துரையாட முடியும் எனவும் அவர் கூறினார். அத்துடன், அதற்காக முற்கூட்டியே எவ்வித மான பதிவுகளையும் மேற்கொள்ளவேண்டும் என்ற அவசியம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

அந்த வகையில், பொதுமக்கள் எந்த விதமான தயக்கமும் இன்றி தன்னுடன் தொடர்பு கொண்டு அவர்களின் பிரச்னைகள் தொடர்பாக பேச முடியும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார். (அ)

# பொருளாதார குற்றவாளிகள் கைகளில் சிக்கியுள்ளது நாடு!

## அனுரகுமார திஸாநாயக்க

கொழும்பு, ஜூலை 07

இலங்கையின் பொருளாதாரம் குற்றவாளிகளின் பிடிக்குள் சிக்கியுள்ளது எனவும் இலங்கையில் பொருளாதார குற்றம் நடந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார குற்றவாளிகளின் குற்றத்துக்கு இழப்பீடு செலுத்துவதற்காக உழைக்கும் மக்கள் தமது சம்பளத்தில் பெருந்தொகையை வரியாக செலுத்துகின்றனர்.

ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களின் உறுப்பினர்கள் அதற்கான இழப்பீட்டைச் செலுத்த நேரிட்டுள்ளது.

பொருளாதார குற்றவாளிகள் மேற்கொண்ட செயல்பாடுகள் காரணமாக பொருட்களின் விலைகள் சாதாரண மக்கள் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளன.

தாங்கிக்கொள்ள முடியாத வாழ்க்கை செலவு காரணமாக பொது மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகி இருக்கின்றனர் - என்றார். (அ)

# இளம் தம்பதி உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 07

குருநாகல்-தம்புள்ளை பிரதான வீதியின் படகமுவ பகுதியில் அதிவேகமாக வந்த லொறி மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இளம் தம்பதிகள் உயிரிழந்துள்ளதாக டொரடியாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சி.பி அமில புஷ்பசிறி (வயது-34) மற்றும் அவரது மனைவி டபிள்யூ.சதுரராணி நிசன்சலா குமாரி (வயது-33) இந்த விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த புஷ்பசிறிகே இலங்கை கடற்படைக்குச் சொந்தமான உணவகம் ஒன்றில் சமையல்காரராக பணியாற்றியவர். இவரது மனைவி கேக் வடிவமைப்பாளர்.

குருநாகல் கட்டுவன மகிந்த கல்லூரியில் ஆறாம் ஆண்டில் கல்வி கற்கும் தமது ஒரே மகளை அழைத்துச் செல்வதற்காகச் சென்றபோதே தம்பதியினர் விபத்திற்குள்ளாகியுள்ளனர்.

மகள் நேற்று பாடசாலையில் செஸ் பயிற்சியில் கலந்து கொண்டிருந்தார்.

விபத்தின்போது, அப்பகுதியில் மழை பெய்து கொண்டிருந்த நிலையில், தம்பதியினர் குருநாகல் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, குருநாகலிலிருந்து தம்புள்ளை நோக்கிச் சென்ற லொறியில் மோதியதில், ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிவேகமாக வந்த லொறி வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் மீண்டும் வீதியில் வந்த திசைக்கு திரும்பியுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.(அ)

# யாழ்.பல்கலை பேரவை உறுப்பினர்களுக்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்புக்கள்!

## துணைவேந்தர் தெரிவு தொடர்பில் விசாரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 07

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவுக்கான விசேட பேரவை அமர்வு எதிர்வரும் ஜூலை 12 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களுக்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்புகள் வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பேரவையின் உறுப்பினர்கள் சிலருக்குத் தெரியாத கைத்தொலைபேசி இலக்கங்களில் இருந்து அழைப்பு மேற்கொள்ளப்பட்டு, "நாங்கள் அரச புலனாய்வுச் சேவையில் இருந்து (எஸ். ஐ. எஸ் ) அழைக்கிறோம். யார் துணைவேந்தராக வர வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? ஏன் அவரை விரும்புகிறீர்கள்? நாங்கள் தான் இரகசிய அறிக்கை கொடுக்க வேண்டும். அதற்காகத் தான் கேட்கிறோம்" என்று பேசப்பட்டதாகப் பேரவை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தெரிவுக்கான பேரவை க் கூட்டம் நெருங்கி வரும் நேரத்தில் இவ்வாறு அழைக்கப்படுவது நல்லதல்ல என பேரவை உறுப்பினர்கள் சிலர் விசனமடைந்துள்ளதாக தெரியவருகின்றது. (அ)

# சென்னை - யாழ். விமான சேவை 16 ஆம் திகதி முதல் நாளாந்தம்!

யாழ்ப்பாணம், ஜூலை 07

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான சர்வதேச நேரடி விமான சேவையை வாரத்தின் ஏழு நாட்களும் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான நேரடி விமான சேவைகள் கடந்த 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

கொரோனா தொற்று ஊரடங்கு காரணமாக சென்னை- யாழ்ப்பாணம் இடையே விமான சேவை நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட விமான சேவை 2022ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய 4 நாட்களில் அலையன்ஸ் எயார் விமான நிறுவனம் இந்த விமான சேவையை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், அலையன்ஸ் எயார் விமான நிறுவனம் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தினசரி விமானமாக இயக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அலையன்ஸ் எயார் விமானம் தினமும் காலை 9.35 மணிக்கு சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் விமான நிலையம் வந்தடையும்.

இதேவேளை, பின்னர் நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு பிற்பகல் 1.25 மணிக்கு சென்னை சென்றடையும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. (அ)

# சிமெந்தின் விலை மீண்டும் குறைப்பு?

கொழும்பு, ஜூலை 07

சிமெந்து விலையை 300 ரூபாவினால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.